ISSN 2012 - 6700
இதழ் - 10

# பூங்காவனம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை



திருமதி. ஸகியா சித்தீக் பரீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:-

**FIVE STAR TEXTILES CENTRE**

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

No. 95, 2 nd Cross Street, Colombo - 11, Sri Lanka.
Tel :- 011 2441810, 2345280, 2441809
Fax :- 94 - 1 - 2345184 / 2582453
E-mail :- shafeeka@sltnet.lk






























# பூங்காவனம்

இதழ் 10 - 2012 செப்டம்பர்
ISSN 2012 - 6700

**பிரதம ஆசிரியர்**

றிம்ஸா முஹம்மத்

**துணை ஆசிரியர்கள்**

எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

**ஆலோசகர்**

ஏ.சி. ஜரீனா முஸ்தபா

**வங்கித் தொடர்புகளுக்கு**

Commercial Bank,
Mount Lavinia Branch,
Best Queen Foundation,
A/C No :- 8930016177.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என்று குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக்கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

| | |
|---|---|
| தனிப்பிரதி | - 80/= |
| தபால் மூலம் | - 100/= |
| வெளிநாடு | - 2.5$ |

**தொடர்புகளுக்கு**

"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
bestqueen12@gmail.com

**Website:-**
www.bestqueen12.blogspot.com

**Phone:-**
0094 (0) 77 5009 222
0094 (0) 71 9200 580

புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் ஒரு நிமிடம்...

அன்புள்ளம் கொண்ட பூங்காவனம் வாசகர்கள் அனைவரையும் பத்தாவது இதழினூடாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இறைவனின் கருணையாலும், வாசக உள்ளங்கள், விளம்பரதாரர்களின் மேலான பங்களிப்புக்களாலும் பூங்காவனத்தின் பத்தாவது இதழ் வெளியிடப்படுகிறது.

உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்கால இலட்சியம் பல்கலைக்கழகம் செல்வதே ஆகும். அந்த வரம் சிலருக்கு வாய்ப்பதுண்டு. பலருக்கு அதுவே சாபமாய் மாறுவதும் உண்டு.

ஆயிரம் கனவுகளுடன் பல்கலைக்கழகத்துக்கு பறந்து செல்லும் இந்தப் பறவைகளில் சில, தமது கனவுகளை பூரணப்படுத்தாமலேயே தத்தமது வீ(கூ)டுகளுக்கு திரும்பிவிடுகின்றன. சிலருக்கு தங்கிப் படிக்கும் சூழ்நிலை பிரச்சினையாகிறது. சிலருக்கு சாப்பாடு வசதிகள் தலைவலி தருகிறது. இவை எல்லாவற்றையும் மிஞ்சி விடுகின்ற ஒரு அநாகரீக செயலின் மறுவடிவம் 'பகிடிவதை' என்பதாகும்.

பகிடிவதை என்ற பெயரில் அரங்கேறும் சில அநாச்சாரங்கள் மாணவர்களின் எதிர்காலத்தையே பாழாக்கிவிட்டிருக்கின்றன. சிலரின் வாழ்க்கைப் போக்கை மாற்றிவிட்டிருக்கின்றன. படிக்க வந்தவர்களின் வாயிலெல்லாம் 'ஸ்ட்ரைக்' என்ற சொல் வந்து விழுகிறது.

ஸ்ட்ரைக் பல விடயங்களை மையப்படுத்தி நிகழ்கின்றது. படித்து, பட்டம் பெற்று குடும்பத்தை பார்க்க வேண்டியவர்கள் கல்வியை இழந்து ஸ்ட்ரைக்கில் ஈடுபடுகின்றனர். இறுதியில் காவல் நிலையங்களில் தலை கவிழ்ந்து நிற்கின்றனர். இதனால் பெற்றவர்கள், குடும்பத்தினர் படும் மனவேதனையை அறியாதவர்களாக செயற்படுகின்றார்கள். ரேக்கிங் பண்ணுபவர்கள் இந்த கலாசாரத்தை விட்டுவிட முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். பகிடிவதை எத்தனை பேரின் வாழ்க்கையை திசை மாற்றியிருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும்.

ஆக இத்தகைய நிகழ்வுகளை இல்லாதொழித்து கல்விக் கூடங்கள், கல்வி போதிக்கும் புனித இடங்களாக மாறி மாணவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக்க வேண்டும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்!!!

- ஆசிரியர்





# பூங்காவினுள்ளே


## நேர்காணல்

திருமதி. ஸகியா சித்தீக் பரீத்

## கவிதைகள்

ம. புவிலக்ஷி
ஜுமானா ஜுனைட்
பதுளை பாஹிரா
மருதூர் ஜமால்தீன்
யோ. புரட்சி
பூனாகலை நித்தியஜோதி
கலைமகன் பைரூஸ்
பி.ரி. அஸீஸ்
நாச்சியாதீவு பர்வீன்

## சிறுகதைகள்

றாபி எஸ். மப்றாஸ்
தாட்சாயணி
பொத்துவில் மனாப்

## கட்டுரைகள்

கவிஞர் ஏ. இக்பால்
கா. விசயரத்தினம்

## நூல் மதிப்புரை

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

## வாசகர் கடிதம்

## நூலகப்பூங்கா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்காணல்

## திருமதி. ஸகியா சித்தீக் பரீத்

சந்திப்பு :-
ரிம்ஸா முஹம்மத், எச்.எப். ரிஸ்னா

மாவனல்லை தெல்கஹகொடயை பிறப்பிடமாகவும், கொழும்பு தெஹிவலையை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி. ஸகியா சித்தீக் பரீத் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பீ.ஏ பட்டதாரியாவார். இதுவரை 04 நூல்களை வெளியிட்டுள்ள இவர் அகில இலங்கை சமாதான நீதிவான் என்பதும் குறிப்பிடத்தக்கது. பூங்காவனம் பத்தாவது இதழுக்காக அவரை நேர்கண்டபோது பகிர்ந்துகொண்ட விடயங்களை வாசகர்களுக்கு தருகிறோம்.

**உங்கள் இலக்கியப் பிரவேசம் எப்படி நிகழ்ந்தது?**



எனது தந்தை தினமும் பத்திரிகை வாசிக்கும் பழக்கமுள்ளவர். சிறு வயதிலிருக்கும் போதே என்னையும் பத்திரிகை வாசிக்கத் தூண்டினார். விடுமுறை நாட்களில் தந்தையின் முன்னால் இருந்து பத்திரிகை வாசித்துக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. தினகரன் வார இறுதியில் வெளியாகும் சிறுவர் மலர் என்ற பகுதியை விரும்பி வாசிப்பேன். அதிலுள்ள ஆக்கங்களை வாசிக்கும்போது எனக்கும் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

வெண்ணிலாவே என்று தலைப்பிட்டு ஒரு சிறு பாடலையும், கிராமக் காட்சி என்ற ஆக்கத்தையும் எழுதினேன். அதனை தபாலில் சேர்க்க தந்தை உதவினார். அடுத்தடுத்த சிறுவர் மலர்களில் அவை வெளிவந்ததைக் கண்டு ஆனந்தமடைந்தேன். எனது தந்தை என்னைப் பாராட்டி ஒரு பேனையை பரிசாக தந்தார். அதுவரை பென்சிலால் எழுதிய எனக்கு பேனாவால் எழுதக் கூடிய சந்தர்ப்பமும் கிடைத்தது. இதனையே எனது இலக்கியப் பிரவேசமாகக் கருதுகிறேன்.

**உங்களது முன்னோடிகளாக யாரைக் கருதுகிறீர்கள்?**

எனது பெற்றோருக்குப் பின் மத்ரஸாவில் எனக்கு குர்ஆனைக் கற்றுத் தந்த ஹிங்குலோயாவைச் சேர்ந்த முஹம்மது லெப்பை ஆலிம் அவர்கள் மிகவும் அழகான முறையில் தலைப் பாத்திஹா, மவ்லூது, பைத்களைச் சொல்லித் தந்தார். அல்குர்ஆனில் காணப்படும் எதுகை, மோனை, சந்தம் என்பன என்னைக் கவர்ந்தன. அத்தோடு எனது கல்விக் கண்களைத் திறந்துவிட்ட எல்லா ஆசான்களும் ஏதோ ஒரு வகையில் எனது முன்னோடிகளாகின்றனர்.





**உங்களது இலக்கியப் பணி, எழுத்துப் பணிகளின் வளர்ச்சிப் போக்கு எத்தகையது?**

நான் சிறு வயதிலிருந்தே இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்தேன். படிக்கும் காலத்தில் மாணவர் மன்றத்தில் பாடுவேன். பேசுவேன். கதை சொல்வேன். போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளேன். உயன்வத்தை நூராணியா மகா வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வி கற்கும் காலத்தில் கலா மன்றத்தால் வெளியிடப்பட்ட தேனருவி என்ற கையெழுத்து சிற்றிதழை எழுத கல்லூரியில் பணிபுரிந்த பண்டிதர் சிவசம்பு என்ற ஆசான் என்னை வழிப்படுத்தினார். ஏனைய ஆசான்களினதும் நெறிப்படுத்தலின் கீழ் எழுதுவதற்கு களமமைத்துக் கொண்டேன்.

1985 களுக்குப்பின் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளுக்கு பிரதிகள் எழுதவும், பங்கு பற்றவும் சந்தர்ப்பம் கிட்டியது. கொழும்புப் பல்கழைக் கழகத்தில் நான் டிப்ளோமா பட்டப்பின் படிப்பு நெறியை மேற்கொள்ளும்போது. சமூகவியல்துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்த மதிப்புக்குரிய பூமணி குலசிங்கம் அவர்கள் இன ஐக்கியம் சம்பந்தமான கலந்துரையாடல்களுக்கு என்னை இலங்கை வானொலிக்கு அழைத்துச் சென்றார். அப்போது நிகழ்ச்சிக்கான பிரதிகளையும் எழுதிப் பங்கு பற்றினேன்.

அத்துடன் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் மாதர் மஜ்லிஸ் பகுதிக்கு பல வருடங்களாக பிரதிகள் எழுதியதுடன் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியும் வந்தேன். முன்னைய நாள் முஸ்லிம் நிகழ்ச்சிப் பணிப்பாளர்களாகப் பணிபுரிந்த எனது அன்புக்குரிய மாணவன் நூராணியா ஹஸன், அல்ஹாஜ் எம்.இஸட். அஹமட் முனவ்வர் அவர்களும், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சகோதரி புர்கான் பீ. இப்திகார் அவர்களும் இதற்கான சந்தர்ப்பத்தை அமைத்துத் தந்தனர். அவர்களை நன்றியோடு ஞாபகப்படுத்துகிறேன்.

**இதுவரை நீங்கள் எத்தனை நூல்கள் எழுதியுள்ளீர்கள். அதுபற்றி கூறுங்கள்?**

இதுவரை 04 நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளேன். நான் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில் விழிப்பு என்ற சிற்றிதழை மாணவர் ஆக்கங்களைக் கொண்டதாக வெளியிட்டேன்.



நான் எழுதிய முதலாவது நூல் **ஸாஹிராவை உருவாக்கிய உத்தமர்கள்** என்ற தலைப்பில் எழுதிய ஓர் ஆவண நூலாகும். இந்நூல் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டதாகும். இந்நூலை எழுதுவதற்கு என்னை ஆர்வப்படுத்தியவர் அன்று ஸாஹிராவின் கல்வி ஆலோசகராகப் பணிபுரிந்த கல்விமான் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்களாவார். இந்நூலை எனது அறிவுக் கண்களை திறந்துவிட்ட ஆலிம் முஹம்மது லெப்பை அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளேன்.

எனது இரண்டாவது நூல் **விடியலின் விழுதுகள்** என்ற சிறுகதைத் தொகுப்பாகும். இத்தொகுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள், கஷ்டங்களைப் பிரதிபலிக்கும் 16 சிறுகதைகளைத் தொகுத்துள்ளேன். இச் சிறுகதைகளுக்கான கருக்கள் அனைத்தும் யதார்த்தமானவையாகும். இந்நூலை எனது அருமைப் பெற்றோருக்குச் சமர்ப்பணம் செய்துள்ளேன்.

மூன்றாவதாக **இதயத்தின் ஓசைகள்** என்ற கவிதைத் தொகுப்பில் தம்பிக்கு, தங்கைக்கு, தோழிக்கு போன்ற தலைப்பிட்ட சில கவிதைகளோடு சமாதானம், தாலாட்டு, அகதி, தேயிலைத் தோட்டப் பெண் என்ற தலைப்பில் கவிதைகளும், மறைந்த தலைவர் மாமனிதர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கு ஓர் அஞ்சலிக் கவிதையும், எனது அன்புக்குரியதொரு மாணவனுக்கு ஓர் அஞ்சலிக் கவிதையுமாக எழுதி இத்தொகுப்பை பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் முதலாவது அதிபர் ஆயிஷா ரவூப் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளேன்.

**முதிசம்** என்ற தலைப்பிட்ட எனது நான்காவது நூல் நான் கணவனை இழந்து 'இத்தா' அனுஷ்டிக்கும் காலப் பகுதியில் எழுதியதாகும். இது 2500க்கும் மேற்பட்ட மொன்மொழிகளை உள்ளடக்கியதொரு தொகுப்பாகும். இதனை எனது அன்புக் கணவர் அப்துர் ரஸாக் பரீத் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளேன்.

ஐந்தாவது நூலாக **பொது அறிவுக் களஞ்சியம்** என்ற தலைப்பில் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல் தயாராகிக் கொண்டிருக்கிறது.

**நூல்களை வெளியிடும்போது நீங்கள் சந்தித்த சவால்கள்?**

எல்லோரும் சொல்வார்கள் ஒரு நூலை வெளியிடுதல் என்பது, ஒரு குழந்தையைப் பிரசவிப்பது போன்று கஷ்டமானது என்று. அதைத்தான் நானும் சொல்ல வேண்டும். நான் ஒரே மேடையில் மூன்று நூல்களை வெளியிட்டு வேலையை இலகுவாக்கிக் கொண்டேன். எனது முதலாவது நூல் வெளியீடு கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் 2004ல் நாடளாவிய ரீதியில் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்ற தமிழ்தின விழாவின் ஓர் அங்கமாக நிறைவேறியது.

அன்று பிரதமராக இருந்த மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அதிதியாகவும், இந்தியாவிலிருந்து கவிக்கோ அப்துல் ரஹ்மான், பேராசிரியை பர்வீன் சுல்தானா போன்றோர் சிறப்பதிதிகளாகவும், நாடறிந்த தமிழறிஞர்கள், இலக்கியவாதிகள் பார்வையாளர்களாகவும் வருகை தந்திருந்த அச்சிறப்பான விழாவில் எனது முதலாவது நூலை வெளியிடக் கிடைத்தமையை பாக்கியமாகக் கருதுகிறேன். இந்நூல் மூலம் என்னை மிகவும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்த ஸாஹிராக் கல்லூரிக்கு நன்றி பாராட்டுவது எனது கடமையாகும்.

அடுத்த மூன்று நூல்களையும் வெளியிடுவதற்கு நான் பலரிடம் உதவி கேட்க வேண்டியிருந்தது. பெண்களைப் பொறுத்தவரை நூல்களை எழுதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆனால் வெளியீடு என்பதில் அலைந்து திரிவது சிரமமான காரியம் என்று நினைக்கிறேன். இறைவனின் கிருபையால் எனது மூன்று நூல்களையும் ஒரே மேடையில் வெளியிட அகில இலங்கை வை.எம்.எம்.ஏ யின் தலைமைப் பீடம் அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் ஞாபகார்த்த மண்டபத்தை வழங்கி உதவி செய்தது. ஏ.எல்.எம். இப்றாஹிம், என்.எம். அமீன் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வை வை.எம்.எம்.ஏ. யின் மாதர் பிரிவாகிய வை.டப்ளியு.எம்.ஏ. யின் தலைவி மக்கியா முஸம்மில், திருமதி ஸித்தீக், பவாஸா தாஹா மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் ஏற்பாடு செய்து தந்தார்கள்.

இலங்கை முற்போக்கு இஸ்லாமிய இலக்கியச் சங்கத் தலைவர் மருதூர் ஏ. மஜீத், செயலாளர் டாக்டர். தாஸிம் அஹமத், ஊடகவியலாளர் எம்.எம். நிலாம், கலைவாதி கலீல் போன்ற சகோதரர்கள் விழாவை சிறப்பாக நடாத்தி நூல்களை வெளியீடு செய்து, எனக்கு பொன்னாடை போர்த்தி கௌரவமும் தந்தார்கள் என்பதை நன்றியோடு கூறுகிறேன். மண்டபம் நிறைந்த எனது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் இப்போதும் என் கண்முன்னே தோன்றுகிறார்கள்.

**படைப்புகளுக்கான விமர்சனங்களை எப்படி நோக்குகிறீர்கள்?**

விமர்சனங்கள் கட்டாயம் அவசியமானது. விமர்சனங்கள் இருந்தால்தான் படைப்பாளிகளால் முன்னேற முடியும். ஆனால் விமர்சனங்கள் குறை கூறுவதாக மட்டும் இருக்கக் கூடாது. குறைகளோடு நிறைகளும் பேசப்பட வேண்டும். அப்போதுதான் படைப்பாளிகள் மேலும் ஊக்கமடைவார்கள். உதாரணத்துக்கு ஒரு புறாவைப் பறக்கவிட்டு கைகளைப் பலமாக தட்டும் போது புறா மேலே மேலே உயர்ந்து பறப்பதைப் போல கலைஞர்களையும் பாராட்டப் பாராட்ட அவர்கள் உயர் நிலைக்குச் சென்று சமூகத்திற்குப் பயனுள்ள படைப்புக்களை வழங்குவார்கள். அத்தோடு படைப்பாளிகளைப் பொறுத்தவரை போட்டி போட்டு முன்னேறலாம். ஆனால் மற்றொருவரை வீழ்த்துவதற்கு எத்தனிப்பதும், பொறாமைப்படுவதும் தவிர்க்கப்பட வேண்டியவைகளாகும்.

**எதிர்காலத்தில் எத்தகைய இலக்கிய பணிகளில் ஈடுபட உத்தேசித்துள்ளீர்கள்?**

சிறுவர் இலக்கியங்களின் வளர்ச்சி போதாது என்று நினைக்கிறேன். எதிர்காலத்தில் பெண்கள் சம்பந்தமான வலுவூட்டல், சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கப் பணிகளோடு சிறுவர் இலக்கியம் சம்மந்தமாகவும் கவனத்தைத் திருப்ப நினைத்துள்ளேன்.

**நீங்கள் பல வருடங்கள் ஆசிரியராகப் பணி புரிந்துள்ளீர்கள். இன்றைய மாணவர்களின் இலக்கியப் போக்கு? எழுத்துத்துறை பற்றி என்ன கூறுவீர்கள்?**

இன்றைய மாணவர்களின் இலக்கியம், எழுத்து, வாசிப்புத் துறைகள் கவலைக்கு இடமானதாகவே காணப்படுகின்றது. வாசிப்பு என்பது மாணவர்களைவிட்டு வெகு தூரமாகி விட்டது. மாணவர்கள் தொலைக்காட்சி, மின்னஞ்சல், சினிமா என்று வீண் பொழுது போக்குகளில் நேரத்தை வீணடிப்பதைக் காண்கிறோம். இலக்கியம் எழுத்துத் துறை வளர்ச்சிக்குப் பதிலாக இன்றைய மாணவர்களிடையே விரும்பத்தகாத மாற்றங்களும், துர்நடத்தைகளும் மலிந்துவிட்டன.



மாணவியர் ஓரளவு இலக்கியம், எழுத்துத் துறைகளில் ஈடுபாடு காட்டினார்கள். அண்மைக் காலங்களில் அவர்களும் கையடக்கத் தொலைபேசிகளோடும், டியூஷன் கலாச்சாரத்தோடும் தமது காலநேரத்தை வீணடிக்கும் போக்கைக் காண முடிகிறது.

பன்முக ஆளுமை கொண்டவர்களாக மாணவ சமுதாயத்தை மாற்ற பெற்றோரும், ஆசான்களும், சமூகமும் முன் வரவேண்டியது அவசரமும் அவசியமுமாகும் எனக் கருதுகிறேன்.

**இதுவரை உங்களுக்குக் கிடைத்த பரிசுகள், விருதுகள் பற்றி குறிப்பிடுங்கள்?**

* நான் பாடசாலையில் கற்கும் காலத்தில் மாகாண, மாவட்ட மட்டப் பரிசில்கள் பெற்றுள்ளேன். நான் கல்வி கற்ற, கற்பித்த உயன்வத்தை நூராணியா மகா வித்தியாலய மண்டபத்தில் உயன்வத்தை ரம்ஜான் அவர்களின் கீழ் இயங்கும் ப்ரியநிலா இலக்கிய வட்டம் 2005 இல் எனக்கு **இலக்கியத் தாரகை** என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தது.

* 2009 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் தேசிய கலை இலக்கிய மகோற்சவத்தின் நிமித்தம் நடாத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பரிசும், நற்சான்றிதழும் கிடைத்தது.

* இலங்கை, சென்னை, மலேசியா, காயல்பட்டிணம் போன்ற இடங்களில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் அனைத்திலும் பங்கு பற்றி சான்றிதழ்கள் பெற்றுள்ளேன்.



* 2006 இல் கொழும்பு மருதானை ஸாஹிராக் கல்லூரி ஆளுனர் சபை **நல்லாசிரியர்** விருது வழங்கி என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவித்தது. எனது 28 வருடகால ஆசிரியப் பணிக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே அதனைக் கருதி மனத்திருப்தி கொள்கின்றேன்.

* இளம் முஸ்லிம் மாதர் சங்கத்தில் தொடர்ந்து 30 வருடங்கள் சேவை புரிந்த என்னை அச்சங்க உறுப்பினர்கள் நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

* 2011 இலங்கை அரசாங்கத்தால் கலைஞர்களுக்கு வழங்கப்படுகின்ற **கலாபூஷண** விருது கலாச்சார அமைச்சால் எனக்கு வழங்கப்பட்டது.

* 2011 இல் அகில இலங்கை நல்லுறவு ஒன்றியம் மூலம் **சாமஸ்ரீ, தேசமான்ய** விருதுகள் கிடைத்தன.

* 2012ல் அகில இலங்கை மனித உரிமை அமைப்பின் நான்காவது ஆண்டுப் பூர்த்தி விழாவில் சேவைக்கான விருதும், தங்கப் பதக்கமும், நற்சான்றிதழும் கிடைத்தன.

என்னைப் பொறுத்தவரை பட்டம், பதவிகள், கௌரவங்களை விட மேலும் என்னைத் தகுதியாக்கிக் கொள்வதும், சமூகத்திற்குச் சேவை செய்வதுமே எனது நோக்கமாகும்!!!

---

## பாசமேயில்லை

ஒரு வயதில் அழும்போது
தாலாட்டுப் பாட தாய் நினைக்கவில்லை!

ஐந்து வயதில் அழும்போது
தாவி அணைக்க தந்தை நினைக்கவில்லை!

பத்து வயதில் அழும்போது
உரமூட்ட உறவுகள் நினைக்கவில்லை!

இருபது வயதில் அழும்போது
துடைத்துவிட நண்பர்கள் நினைக்கவில்லை!

இருபத்தைந்து வயதில் அழும்போது
கைப்பிடிக்க காதலன் நினைக்கவில்லை!

முப்பது வயதில் அழும்போது
கட்டி அணைக்க கணவன் நினைக்கவில்லை!

முப்பத்தைந்து வயதில் அழும்போது
பெற்றெடுத்த பிள்ளை நினைக்கவில்லை!

இனி நான் அழப்போவதில்லை
ஏனெனில் ஆறுதல் படுத்த யாருமேயில்லை!

ம. புவிலக்ஷி - நீலாவணை

# வார்த்தைக்குள் அகப்படவில்லை

பூக்களுக்குள் வாசம் எங்கே
தேடினேன்..
காம்பு மட்டுமே
மீதமாகியது கைகளில்..!
வெற்றிகளின் ஓரம் வரை சென்றேன்,
பெரும் கிண்ணக் குழிகளாய் நின்றன!

மழை நாட்களில்
நீர் முத்துக்களைப் பிடித்தேன்..
வாழ்வின் நிலையாமை புகட்டின!
சாலைகள் தோறும்
கற்களைப் பார்த்தேன்..
மனித இதயங்களின்
மறு வடிவம் யாம் என்றன!

கண்ணாடி தேசத்திற்குள் நுழைந்தேன்
என் நிழலைத் தவிர
மற்றெல்லா நிழல்களும்
ஒளிந்து கொண்டன!

உண்மை கொண்டு
உலகை நோக்கினேன்..
பார்வைக்கு முன்னாலுள்ளதெல்லாம்
பூஜ்ஜியமாகின!

பார்வை தாண்டி நோக்கும் போது
பௌதிக அதீதம் காட்சி தந்தது..
வார்த்தைக்குள் அகப்படவில்லை
அது!

நன்றி கூறுவேன்...

வித்தொன்றை சிதைத்துப் பார்த்தேன்
எதுவும் இல்லாமல் போனது..
இன்னொன்றை
மண்ணுள் புதைத்துப் பார்த்தேன்
மரமாக வந்து கதை பேசியது!

இலைகளையும் பூக்களையும்
உனக்குள் எப்படித்தான்
சுமந்தாயோ என்றேன்..
மண்ணைப் போட்டு மூடினாலும்
உன்னை
மீறி வரும் சக்தி எங்கே
என்றேன்..

மறுபடியும் வித்தொன்றை
சிதைத்தொருக்கால் பார்த்தேன்...
மாய வரம் ஏதேனும்
அங்குள்ளதுவா தேடினேன்..

"வித்திலைகள்" மட்டும் தான்
எனைப் பார்த்து முறைத்தன..
மற்றதெல்லாம் எனை விட்டு
என் கண்ணை மறைத்தன..
பூவின் நிறமேதும்
அங்கு இல்லை..
கனியின் தீஞ்சுவையும்
காணவில்லை..!
விருட்சம் அதன் தலைவிதியை
வித்தினுள்ளே தேடிப் பார்த்தேன்!

ஒன்றும் புரியவில்லை..

ஒரு வித்தை நாட்டிப் பார்த்தேன்!

கன்றாய் எழுந்தது..
மரமாய் விரிந்தது..
பூக்கள் சிரித்தன..
பூச்சிகள் வளைத்தன..
கனிகள் விளைந்தன..
என் கண்கள் வியந்தன..

வித்திற்கு நன்றி சொல்ல
தேடிப் பார்த்தேன்
காணவில்லை
அதிசயம் தான்..
இறைவனுக்கே நன்றி
சொல்வேன்!!!

● **புத்தளம் ஜுமானா ஜுனைட்**





# என்றோ செய்த வினை

## சிறுகதை



**றாபி எஸ். மப்றாஸ் - மருதமுனை**

புனித ரமழான் மாதம்... இரவின் மடியில் முழு நிலா உறங்கிக்கொண்டிருந்த வேளை அந்தக் கிராமமே இரவு வணக்கங்களில் மூழ்கிக் கிடந்தது. பள்ளி ஒலிபெருக்கிகள் முழுவதிலும் ஒலித்த குர்ஆன் வசனங்கள் தறாவீஹ் தொழுகை களைகட்டிக் கொண்டிருப்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தன.

பெரிய பள்ளியிலிருந்து ஒலித்த பர்சானின் குரல் காற்றோடு கலந்து இன்னிசையானது. அங்கிருந்த அனைவரது உள்ளத்திலும் பக்தி ததும்ப பர்சானின் குரலும் ஒரு காரணம். மாடியிலிருந்த பெண்களெல்லாம் 'யாருடி அது என்ன அழகான குரல்? என்ன வடிவாத்தான் ஓதுறான் அந்தப் புள்ள!' எனத் தமக்குள்ளே குசுகுசுத்துக் கொண்டனர். உண்மையிலேயே அந்தப் பையனப் பெத்தவங்க நல்ல பாக்கியசாலிகள் ஏக்கப் பெருமூச்சுடன் ஹமீதாவின் வார்த்தைகள் வெளியானது. 'தொழுவிச்சது யாரெண்டு பார்த்திடணும்' என்ற ஆவல் ஹமீதாவின் மனதினுள்ளே இழையோடியது.

தொழுது முடிந்த கையுடன் தன் கணவர் மஹ்மூதை நோக்கி விரைந்தாள். அங்கே பள்ளி முற்றத்திலே நிர்வாக உறுப்பினர்களோடு அளவளாவிக் கொண்டிருந்த தன் கணவரை மெதுவாக அழைத்து 'அந்த தொழுவிச்ச பையன் யாருங்க?' எனக் கேட்டதுதான் தாமதம் 'ஆ! அதுவா? அது நம்மட நாசர் பொலிஸிட மூத்த மகன். நம்மட ஊர் மத்ரஸாவிலதான் நாலாம் கிதாபு ஓதுறானாம். ரொம்ப நல்ல பையன். அவன்ட பேரும் என்னவோ பர்சான் எண்டு சொன்னான்' என்றார் மஹ்மூத். பள்ளித் தலைவர் அல்லவா. அதுதான் அத்தனை விவரங்களையும் புட்டுப்புட்டு வைத்துவிட்டார்.

'என்ன! நாசர் பொலிஸிட மூத்த மகனா. யா அல்லாஹ்! நம்ம தொழுத தொழுகையெல்லாம் பாத்தில். ச்சே. இவ்வளவு நேரமும் அவனுக்குப் பின்னாலயா நின்று தொழுதம்' என ஹமீதா, கொக்கரிக்கத் தொடங்கினாள்.

அவளது இந்த அலறல் பள்ளி முற்றத்தில் கூடியிருந்த அனைவரது கவனத்தையும் தன் பக்கம் திருப்பிக் கொண்டது. இதனை அறிந்து கொள்ளாத மஹ்மூதும் 'ஏன் அப்படிச் சொல்ர? என்ன விஷயம்?' என்று வினவ 'அவன் ஒழுங்காப் பிறந்தவன் இல்லீங்க. அவன்ட பிறப்பே தப்புத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தொழுவிச்சா எப்படிச் சரியா வரும்?' எனப் பதிலளித்த அவளது குரல் அங்கு குழுமியிருந்த அனைவரது காதுகளையும் சென்றடைந்தது.

அது பர்சானின் செவிகளை மட்டும் விட்டுவைக்குமா என்ன? அந்தச் செய்தி அவனை மின்சாரமாய்த் தாக்கியது. சில நொடிகள் சிலையாய் நின்றான். அவனது வாய் எதனையும் உச்சரிக்கவில்லை. மாறாக அவனது கண்கள் பேசின. இப்போது அவனது உள்ளத்தில் ஓராயிரம் கேள்வி அலைகள் சுனாமியாய் எழுந்தன. அந்தச் செய்தி மட்டும் அவனது காதிலே சொய்ங் என்று ஒலித்துக்கொண்டிருந்தது. திடீரென நண்பனின் குரல் கேட்டு இயல்பு நிலைக்குத் திரும்பிய பர்சானுக்கு யாரையும் பார்க்க முடியவில்லை. பார்வையை தாழ்த்திக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டான் நனைந்த விழிகளுடன்..

வீடு சென்ற அவனது பார்வைகள் ஒரு முகத்தில் போய் முட்டியது. ஏதோ பார்க்கக்கூடாத ஒன்றைப் பார்த்தது போல் தன் முகத்தை திருப்பிக் கொண்டான். அது வேறு யாருடைய வதனமும் அல்ல. தன் தாயுடையதுதான். அருவருப்புடன் பக்கத்திலிருந்த சின்னம்மாவின் வீட்டுக்குச் சென்றான். தான் அறிந்திராத ஏதோ ஒரு பெரிய ரகசியம் வீட்டில் புதைந்து கிடப்பது மட்டும் அவனுக்கு நன்றாகப் புரிந்தது.

பர்சான் மெதுவாக தன் சின்னம்மா பர்ஹாவை பணிவுடன் நெருங்கி 'சாச்சி! ஒரு விஷயம் கேட்பன் மறைக்காம உண்மையச் சொல்லனும் சொல்லுவீங்களா?' என்று கேட்க அவளும் 'சொல்லுடா ஒனக்கிட்ட எத மறைக்க' எனச் சாதாரணமாகப் பதிலளித்தாள்.

'நான் தப்பாப் பிறந்தவனா...? நான் ஒழுங்காப் பிறக்கலயா..?' என விழுங்கி வைத்திருந்த வினாக்களை வெளியே துப்பினான்.

பர்ஹா ஒரு கணம் ஆடிப் போனாள். பர்சானின் முகமோ பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனது கண்ணீரில் தன் அரும்பு மீசைகளும் நனைந்து பேர்யிருந்தன. 'எத்தனை நாளுக்குத்தான் இவனுக்கிட்ட அந்த விஷயத்த மறைச்சு வைக்கிற? எந்த ரகசியமும் நிறைய நாளைக்கு உசிர் வாழாது' என அவள் ஆழ் மனது குறுகுறுத்தது.

அவள் பேச ஆரம்பித்தாள். பர்சான் மனதை திடப்படுத்திக்கொண்டு செவிகளையும் கூர்மையாக்கிக்கொண்டான். 'பர்சான் உங்க உம்மாவும், வாப்பாவும் உசுருக்குசிரா லவ் பண்ணினாங்க. நல்லா பழகினாங்க. அந்த நேரத்தில அவங்களையே அறியாம அவங்க செஞ்ச தப்பால நீ புறந்திட்ட, அவங்க அந்த நேரத்தில கலியாணம் முடிக்கல. இதெல்லாம் வெளியூரிலதான் நடந்தது. இந்த ஊரில பெரிசா ஒத்தருக்கும் தெரியாது' என்ற அவளை இடைமறித்த பர்சான் 'இப்ப தெரிஞ்சிற்றே' என நடந்தவற்றை கூறி ஓ என அழுதான். பர்ஹா அவன் கண்களை துடைத்துவிட்டாள். ம்ஹூம் கடலலைக்கு அணை போட முடியாதது போல அவன் கண்களிலிருந்து வடிகின்ற கண்ணீருக்கும் தடைபோட முடியவில்லை.





பர்சான் பேசத் தொடங்கினான். அவனது குரலில் ஏக்கமும், நடுக்கமும், தளர்ச்சியும் தாராளமாகத் தெரிந்தது. 'சாச்சி அவங்க ஏதோ தப்ப செஞ்சிட்டாங்க, ஆனா அதுக்கு பலிக்கடா நானா சாச்சி, இனி என்ட எதிர்காலத்தப்பத்தி கொஞ்சம் யோசிச்சிப் பாருங்க? என்னை அவங்க படிக்க வைச்சிருக்கலாம், இல்லையன்னா ஏதாவது தொழில் செய்ய சொல்லியிருக்கலாம், ஆனா என்னை ஓத உட்டுட்டாங்களே' நான் எப்பிடி இனி மத்தாக்களோட பேசுறது? எப்பிடி மிம்பர் ஏறுறது? நான் என்னத்த சொன்னாலும் என்ட பொறப்பப் பத்தியேதான் இந்த சமூகமே பேசும், எனக்கி இனி இந்த ஊர்ல யாருட முகத்தையும் பார்க்க ஏலாது சாச்சி' என தனது உள்ளத்தில் எழுந்த ஓராயிரம் வினாக்களில் சிலதை அள்ளி வீசினான். அவனது கேள்விகள் நியாயமானதுதான். பர்ஹாவுக்கு எதுவுமே பேச முடியவில்லை.

இரவு முழுவதும் யோசனையும், கவலையும் அவனை ஆக்கிரமித்துக் கொண்டன. அவன் வீட்டிற்கு செல்லவுமில்லை. பல கேள்விகளும் அவனது எதிர்காலமும் அவன் கண் முன்னே பாரியதொரு வினாக்குறியாய் தெரிந்தது. ஆனால் இரவெல்லாம் விழித்திருந்த அவன் ஏதோ ஒரு முடிவெடுத்திருக்க வேண்டும். இதுவரை அவன் வாழ்ந்த நாட்களும், சூழலும் வேறு. இனிமேல் அவன் வாழப்போகும் நாட்களும், சூழலும் வேறு என்பதை அவன் நன்கே உணர்ந்திருக்க வேண்டும்.

அதிகாலை நேரம் நோன்பு நோற்பதற்காக வீட்டில் அனைவரும் விழித்தனர். வீட்டில் எல்லாரும் இருந்தனர். ஆனால் ஒருவரை மட்டும் காணவில்லை. ஆமாம்! பர்சானைக் காணவில்லை. அவன் கண்காணாத தூரத்திற்குப் போய்விட்டான். எங்கே போனான் என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. அவன் போனதோடு வீட்டில் இருந்த நிம்மதியையும், சந்தோஷத்தையும் கூடவே எடுத்துச் சென்றுவிட்டான்.

பர்சானின் பெற்றோர் அன்று செய்த தவறை இன்றும் நினைத்து வருந்துகின்றனர். இன்றாவது பர்சான் வருவானா? என்று தினமும் ஏங்குகின்றனர்.

பெற்றோர் செய்த பாவம் பிள்ளையைத் தாக்கும். அப்போது அந்தப் பாவத்தின் வலி நன்றாகப் புரியும். இன்று பர்சானின் பெற்றோருக்குப் புரிவது போல்!!!

"பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 06
பூங்காவனம் பதிப்பகம் - கல்கிசை

**ப்ரியமான வாசகர்களே!**
**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய ஆசான்

பன்முகப் படைப்புகளால்
விண்ணினைத் தாண்டிய வித்தகர்
கண்வழி தாட்சண்யத்தால்
சமூகத்தைப் பாடிய கவிஞர்
தனிவழியதில் தனித்துவம் பேணி
தன்னிகரற்ற எழுத்தாக்கங்களின் கருத்தா
தமிழ் மாமணி ஏ. இக்பால்

அரை நூற்றாண்டின் ஆக்கிரமிப்பிலே
அடைந்திட்ட பட்டங்கள், விருதுகள்
படைப்புலகின் கௌரவங்கள்
இலக்கிய தளத்தை அலங்கரித்தது
சமூக நேசிப்பை பலப்படுத்தியது
இலக்கிய விற்பன்னர் போர்வை
போர்த்தப்பட்டது..

சீரிய சிந்தனையால்
தீங்குகளை சாடிய விமர்சகர்..
நேரிய பார்வையால் தமிழ்
வளத்திற்கு புகழ் சேர்த்த ஆய்வாளர்..
ஐம்பது வருட இலக்கிய ஆவணம் செய்து
இலக்கிய நெஞ்சங்களுக்கு மதிப்பளித்த
இனங்கள் போற்றும் இலக்கியவாதி!

எழில் மிகு பதுளையிலே
ஏற்றமிகு கல்வியதைப் போதித்த
இலக்கியமணி ஏ. இக்பாலின்
'குருகுல சீடர்களில்' நானுமொருத்தி!

அவர் வழியதில்
ஆசிரியப் பணியின்
புனிதம் பேணியவர்கள் நாம்
நல்லவர்களின் வல்லமைகளை
வாழ்த்தும் பெருமைக்குரியவளாக
நான் என்றும்!!!

■ **பதுளை பாஹிரா**





# இலக்கிய அனுபவ அலசல் – 05

**(கவிஞர். ஏ. இக்பால்)**

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ஆய்வுகள் நடத்தும் போதெல்லாம் என்னிடமும் நூல்கள் வாங்குவார். மொழியியல் சம்பந்தமாக ஆய்வின் போது மு. வரதராசனின் நூல்களை உடனடியாக திருப்பிவிடுவார். ரா. சீனிவாசனின் மொழியியல் நூலை வாங்கியவர் உடனடியாகத் தரவில்லை. மிகவும் கஷ்டப்பட்டே அவரிடம் திரும்பப் பெற்றேன்.

மு.வ. வின் மொழி நூல், மொழி வரலாறு, டாக்டர் சக்திவேலின் தமிழ் மொழி வரலாறு, டாக்டர் முத்துச் சண்முகனின் இக்கால மொழியியல், கா. சுப்பிரமணியப் பிள்ளையின் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக வெளியீடான மொழி நூற் கொள்கையும், தமிழ் மொழி அமைப்பும் இவ்விதம் நிறைய நூல்களை கொடுத்து வாங்கியுள்ளேன். இவற்றுள் சீனிவாசனின் மொழி நூலையும் சுப்பிரமணியப் பிள்ளையின் மொழி நூற் கொள்கையும், தமிழ் மொழி அமைப்பும் ஆகிய நூல்களை திரும்பப் பெற அவதிப்பட்டேன்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் என்னைப் பற்றி எழுதிய கட்டுரையொன்றின் இறுதிப் பகுதியில்

'இக்பாலுக்கு இப்பொழுதும் கூட என்னிடத்தில் ஓர் அதிருப்தி என்பதிலும் பார்க்க ஆதங்கம் கலந்த பயம் உண்டென்று கருதுகிறேன். ஏனெனில் ஏறத்தாழ பத்துப் பதினொரு வருடங்களுக்கு முன்னர் ஈழத்து இலக்கிய வரலாறு பற்றி ஒரு தனி நூலை எழுதத் தீர்மானித்த போது இக்பாலிடமிருந்து அதற்கு வேண்டிய முக்கிய சான்றாதாரங்களில் ஒன்றான கனக செந்தி நாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி பிரதியைப் பெற்றுக் கொண்டேன். அப்பிரதியில் அதைப் பற்றி எதிர்த்தெழுதிய சில்லையூர் செல்வராசனின் கட்டுரைத் தொகுப்பு சேர்த்துக் கட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்பால் அப்பிரதியைத் தருமாறு அடிக்கடி கேட்பார்'.

இப்பிரதியை இன்னும் அவர் எனக்குத் தந்ததில்லை. அவர் குடும்பத்தார் முடியுமானால் அதை எனக்குத் தந்துதவுமாறு இன்று கேட்கிறேன்.

கனக செந்தி நாதன் எழுதிய அந்த நூலின் முதற்பதிப்பல்ல இது. எஸ். பொன்னுத்துரை, எம்.ஏ. ரஹ்மான் கூடி திரிவுபடுத்திய நூல் தான் இது. செந்தி நாதனின் சேட்டைக்குச் சாட்டையாக தினகரனில் தொடர்ந்த கட்டுரையையே நான் அதில் சேர்த்துக் கட்டியுள்ளேன்.

இதன் பின் எவ்வளவு கெஞ்சினாலும் பேராசிரியருக்குப் புத்தகமே கொடுப்பதில்லை. ஆ.இரா. வேங்கடாசலபதி பதிப்பித்து வெளியாக்கிய பாரதியின் கருத்துப் படங்கள் நூல் என்னிடம் உண்டு என்பதை அறிந்த பேராசிரியர் அவர்கள் கேட்டு மன்றாடினார். 9'' x 11 - 1/2'' அளவு, 210 பக்கங்களைக் கொண்ட அந்நூல் இலங்கையில் என்னிடம் மட்டுமே உண்டு என நினைக்கிறேன். அதை எடுத்துச் சென்று பேராசிரியரிடம் ஒரு பகல் முழுதும் நின்று காட்டிவிட்டு கையோடு கொண்டுவந்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாரதி கவித்துவம் ஒரு மதிப்பீடு' எனும் நூலை இராசேஸ்வரி நீலமணி எழுதியுள்ளார். 84 பக்கங்களைக் கொண்ட அந்நூல் பாரதிக்கு தமிழே தெரியாது என அடித்துக் கூறுகிறது. இந்நூலும் இலங்கையில் என்னிடம் மட்டும்தான் உண்டு. பேராசிரியர் இதைக் கேட்டும் காட்டுவதற்கு நேரம் கிடைக்கவில்லை. (இடையில் ஒரு சொருகல்) தமிழ்ச்சங்கம் பாரதி விழாவை சிறப்புற நடாத்தியது. அங்கு கலந்து கொண்டவர்கள் எவருக்கும் பாரதி பற்றி முழுமையாக தெரியாது என்பது எனது கருத்து. மகாகவி பாரதியார் பற்றிய குறிப்பு என ஜீவநதியில் தொடரவிருக்கிறேன்.

சிலர் புத்தகங்களை எடுத்துச் சென்று தொலைத்துவிட்டனர். அவற்றை எனக்கு விளங்கக் கூடியதாய் இருந்தது. 1974களில் விமர்சகர் ஸ்ரீபதி, பேராசிரியர் சிவத்தம்பி பெயரைக்கூறி என்னை அண்டினார். கூறிய 'பைண்டு'களை எடுத்துச் சென்று திரும்பத் தந்தார். புத்தகங்கள் நிறைய வாங்கி வாசித்துத் திரும்ப தந்தார். 30.08.1974களில் வெளியான 'எழுத்து' ஒருவருட 'பைண்ட்' உதிரியாக ஏழு பிரதிகளை 97ல் எடுத்துச் சென்றவர் திரும்பத் தரவில்லை. இன்னொருகால் கண்டியில் சந்தித்து கழுத்துடன் சேர்த்து ஷேர்ட்டைப் பிடித்தேன். 'எனது பொருள்களெல்லாம் களவு போய்விட்டது. அதிலே பைண்ட் உதிரிகள் அடங்கும்' என அழுதார். என்ன செய்வது விட்டுவிட்டேன்.

18.02.1977 களில் டாக்டர் அமீர் அலி என்னைச் சந்தித்து "அல்பாக்கியத் ஸாலியாத்" மலரை அவசரமாக உடன் தருவேன் எனக் கூறி எடுத்துச் சென்றார். இன்று வரை அவரையும் காணோம். மலரையும் காணோம்.

அக்கரைப்பற்று இப்றாலெவ்வை என்பவர் அரசியல், இலக்கியத்தில் எல்லாம் எடுபிடி. மார்க்ஸிம் கோக்கியுடைய "தாய்", நேரு மகளுக்கெழுதிய கடிதங்கள்- "நேரு சரித்திரம்" இவற்றை 1979 களில் எடுத்துச் சென்றார். அவரை இன்னும் காணவில்லை. கலைவாதி கலீல் இலங்கையர் கோனின் "வெள்ளிப் பாதசரம்" நூலை அவசரமாக வாங்கிச் சென்றார். இதுகால வரை நூலையே காணோம். துக்கமான விசயம் அந்த நூலை எங்கேயும் வாங்க முடியாது. நஹியா அவர்கள் "மெய்ஞ்ஞானப் பேரமுதம்" நூலை வாங்கிச் சென்றார். அதை எங்கேயோ தொலைத்துவிட்டார். எப்படியோ ஒரு பழைய பிரதியை எங்கிருந்தோ தேடித் தந்துவிட்டார்.

சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்த எனது சிறுவர் பாடல்கள் 26 அடங்கிய பைல் ஒன்றை குமரன் புத்தக இல்லம் டாம் வீதியில் இருக்கும் காலம், குமரனிடம் கொடுத்தேன். அதை இன்று வரை புத்தகமாக வெளியிடவுமில்லை. திருப்பித் தந்ததுமில்லை. கேட்ட போது அதை என்னுடன் அங்கே சென்ற ஜவ்ஸகியிடம் கொடுத்ததாகச் சொன்னார். சொன்னபடி கொடுத்ததாகத் தெரியவில்லை. இதனால் குமரனுக்கு செல்வதையும் நிறுத்திக்கொண்டேன்.

இன்னும் வாங்கக் கூடிய புத்தகங்களை இழந்து, வாங்கியிருக்கிறேன். அவர்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள் அல்லர். இளையவர்கள், புத்தகம் பற்றி அறியாதவர்கள் இன்னும் என்னை அண்டுகிறார்கள். பைண்டுகளையும், ஆய்வுக்குரிய நூல்களையும் எடுத்துச் செல்ல நான் அனுமதிப்பதேயில்லை.

**(இன்னும் வரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்பெயரெடுப்பாய்



வீதியில் விளையாடாதே தம்பி
வீண்தீய செய்கையிது தம்பி
நீதியற்ற இச்செயலால் - வாழ்வில்
நிர்க்கதியே சேருமிந் நாளில்!

உடலுக்கு விளையாட்டு தேவை
உடற்சோர்வை அகற்றுமது நன்மை
இடம் நல்ல மைதானம் நாடு
இகழ்ச்சியற்று விளையாடளவோடு!

வாகனமது பல வழியால் நாளும்
விரைந்திடுமே பலதேவை உள்ளோர்
தேகாரோக்கியமற்றோர் பல முதியோர்
தேவைக்குச் செல்வாரதை புணரு!

மேடு பள்ளம் முள் பல வீதித் தொல்லை
மேனியிதால் பாதிக்கும் நன்குணரு
கேடு வரும் பிறர் ஏச்சும் துன்பம்
தேவலமாய் உனை அண்டார் நல்லோர்!

பொது மக்களுக் கிடரு தரும் செயலால்
பொறுமையற்று பகை மூளும் அயலால்
இதுவுண்மை சிந்தனையினிலேற்றே
இன்முகத்தோர் நல்ல பெயரெடுப்பாய்!!!

● மருதூர் ஜமால்தீன்

## எருமை

மழை வெயில் பாராது
மனம் வைத்துழைக்கும்
மானிடனைப் பார்த்து
எஜமானன் ஏசினான்
'எருமை' என்று!

விசுவாசமாய் உழைப்பதையே
விளக்குகிறான் எஜமானன் என
விளக்கம் கொண்டான்
ஏழை உழைப்பாளி!!!

● யோ. புரட்சி

கலை இலக்கிய சமூக சஞ்சிகை

# தொடராத சொந்தங்கள்

**சிறுகதை**

**தாட்சாயணி**

மலரிணிக்குக் கடிகாரத்தை எடுத்துத் திருப்பி முறுக்கிவிட வேண்டும் போலிருந்தது. பொழுதுவிடிந்து நாளை வருவது போல, பொழுது இருண்டு முதல்நாள் இரவைத்தொட்டு, அதற்கு முதல்நாள், முதல்நாள் என்றுபோய் அவள் எதிர்பார்க்கின்ற அந்தநாள் அதுவந்து நிற்காதா...? அப்போது சக்தி ரீச்சரைப் பார்த்து,

"நான் உங்கட வகுப்பிலை படிக்க வருவன். அப்ப நீங்கள், என்னை உங்களுக்குச் சொந்தம் எண்டு சொல்லோணும்..." என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லி வைத்தால்தான் பிறகு இந்தநாள் வரும்போது ரீச்சரை அவளது சொந்தக்காரர் என்று சொல்ல, ரீச்சரும் அதை ஒத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இப்போது ரீச்சர் இவளைத் தெரியவே தெரியாது போலல்லவா இருக்கின்றா. மற்றப் பிள்ளைகள் எல்லாம், இவள் ஏதோ புளுகுவதுபோல, இவளைக் கேலியாகப் பார்க்கின்றன. அப்படியானால் இவளது கண்ணில் பழுதா...? அல்லது நினைவில்தான் கோளாறா...? ஏன் ரீச்சரைப் பார்த்தால் சொந்தமென்று இவளுக்குத் தோன்றவேண்டும்.

மலரிணிக்கு இப்போது பத்து வயது. இந்தமுறைதான் அவள் புலமைப்பரிசில் எடுக்கவேண்டும். அம்மாவும் ரீச்சர்தான். அம்மா எப்போதும் அதட்டி, மிரட்டித்தான் படிப்பிப்பாள். அம்மாவின் "சுப்பர் கப்" பின் பின்னே, எப்போதும் அம்மாவைக் கட்டிக்கொண்டபடிதான் இவள் ரியூசனுக்குப் போவாள். அம்மாவின் வேகம் இவளுக்குப் பயத்தைத்தான் ஏற்படுத்தும்.

"என்ன பயம் நான் இருக்கேக்கை..." என்று சொல்லிக்கொண்டு அம்மா வேகமாய்ப் போவா.

அம்மாவின் வேகமும் அதட்டலும் மலரிணியை அம்மாவிலிருந்து விலகவைத்தன. சக்தி ரீச்சர் வரமுதல் வகுப்பில் படிப்பித்த வசுமதி ரீச்சரிடம், மலரிணிக்கு நல்ல ஒட்டு. வசுமதி ரீச்சரின் சேலைத் தலைப்பை இழுத்து தன்னைச் சுற்றிப் போட்டபடி மலரிணி செல்லம் கொஞ்சியிருக்கிறாள். அம்மாவுடையதென்றால் சேலைத் தலைப்பைத் தொடக்கூட முடியாது. அதட்டி அனுப்பிவிடுவாள். வசுமதி ரீச்சர் குழந்தை தானேயென எல்லாவற்றுக்கும் இடம்கொடுத்தாள். மலரிணி அனேகமாக வகுப்பில் முதலாம் பிள்ளையும்கூட. அதனாலும் வசுமதி ரீச்சரிடம் ஒருவித சலுகையைப் பெற்றிருந்தாள் இவள்.





வசுமதி ரீச்சருக்கு கொஞ்சநாட்களுக்கு முன்னால்தான் இடமாற்றம் வந்தது. ஏதோ தேவைக்காக வசுமதி ரீச்சரே விரும்பி இடமாற்றம் பெற்றுப் போவதாக ஆசிரியர்கள் பேசிக்கொண்டார்கள். வசுமதி ரீச்சருக்குப் பதிலாகத்தான் இவளது வகுப்பில் வகுப்பாசிரியராக வந்தா சக்தி ரீச்சர்.

சக்தி ரீச்சரைப் பார்த்தவுடனேயே இவளுக்கு மிகுந்த புளுகமாய்ப் போய்விட்டது.

"இந்த ரீச்சர் எங்கட சொந்தக்காரர்..." பக்கத்திலிருந்த டெய்சிக்குப் பெருமையாய் சொல்லிக்கொண்டாள். டெய்சியின் முகம் ஒருமாதிரிக் கூம்பிப் போனது. இவளுக்கும், டெய்சிக்கும் எல்லாவிதத்திலும் போட்டிதான். இவள் முதலாம் பிள்ளை என்றால் அவள் இரண்டாவதாக வருவாள். அவள் முதல் என்றால் இவள் இரண்டாவதுதான். பாடங்களிலும் யார் அதிகூடிய புள்ளி பெறுவதென்பதில் எப்போதுமே போட்டி. வசுமதி ரீச்சர் இருந்தவரையில் இருவரையும் சமமாகத்தான் பார்த்தா. இனி சக்தி ரீச்சர் வந்தவுடன் மலரிணிக்கு அவள் சொந்தமென்றால், தன்னுடைய இருப்புத் தொலைந்து போகுமென எண்ணியோ தெரியவில்லை. டெய்சி மறுகினாள். இவளோடு முகம்கொடுத்துப் பேசவில்லை. சக்தி ரீச்சரோடும்தான்.

இவள்தான் உற்சாகத்தோடு ரீச்சரின் அருகே போனாள்.

"ரீச்சர்... நீங்கள் எங்களுக்குச் சொந்தமெல்லோ...?"

"ஆர்சொன்னது...? எனக்குத் தெரியேல்லையே... நீங்கள் ஆரெண்டு...?"

டெய்சி உன்னிப்பாக அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

"நீங்கள் அப்ப வந்தனீங்கள் அங்கை..."

"எங்கை வந்த... எப்ப...?"

"அதுதான் பெருமாள் கோயிலுக்கு... அப்ப நீங்கள் எங்கட சொந்தக்காரர் எண்டு அம்மா சொன்னவ..."

"எப்ப...?" சக்தி ரீச்சரின் விழிகள் கேள்விகளாயின.

"அப்ப வருசப் பிறப்பு முடிஞ்ச நேரம்... கனகாலம் ஆச்சு..."

"ஓ..." சக்தி ரீச்சர் ஆச்சரியப்பட்டுவிட்டுச் சொன்னா.

"எனக்கு ஞாபகம் இல்லையே... இப்ப படிப்பம் என்ன..."

அதற்குமேல் மலரிணியைப் பக்கத்தில் நிற்க அனுமதிக்கவில்லை ரீச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போய் இருங்கோ... பாடம் படிப்பம் ..." மலரிணி சோர்ந்து போய் இருக்கைக்கு வந்தாள்.

டெய்சியிடம் பொறாமை அவிந்து இப்போது கோணலான ஒருமலர்ச்சி தெரிந்தது.

ஏன் ரீச்சர் அப்படிப் பொய் சொல்ல வேண்டும். அன்றைக்குக் கோவில் முற்றத்தில் அவர்களும், நாங்களுமாய் காரில் கோவிலுக்குப் போனபோது அம்மா இவளைப் பார்க்கத்தான் அந்த "அன்ரி" வந்ததாகச் சொன்னா. பிறகேன், அந்த சொந்தமெல்லாம் இல்லாமல் போனது. இவள் வீட்டுக்கு வந்ததும், பொறுக்கமாட்டாமல் அம்மாவிடம் வந்து புலம்பினாள்.

"அம்மா.. எங்கட புது ரீச்சர் எங்களுக்குச் சொந்தமில்லை எண்டு சொல்லுறா..."

"ரீச்சர் மாரெல்லாம் எங்களுக்குச் சொந்தமாகலாமே...?"

"எல்லாரும் சொந்தமில்லை..., ஆனால் சக்தி ரீச்சர் சொந்தம்தானே..."

"என்னெண்டு சொந்தம்...?"

"அதுதானையம்மா... அப்ப சொன்னீங்கள்... கோவிலுக்குக் கார் பிடிச்சு நாங்கள் போகேக்கை... என்னைப் பாக்க வந்த "அன்ரி" எண்டு சொன்னனீங்கள். அவதானை எங்கட ரீச்சர்..."

"நீ ஆரையோ நினைச்சுக் கதைக்கிறாய். சொந்தமெண்டால் அவவே கதைப்பாதானை..."

அதற்குமேல், அம்மா இவளுடன் கதைக்க நேரமில்லை என்பதுபோல், கண்ணாடியைப் போட்டுக்கொண்டு கணிப்பீட்டுத்தாள்களுடன் உட்கார்ந்து விட்டாள்.

நாட்கள் போகப் போக, ரீச்சர் இவளைக் கண்டுபிடித்து, நல்லாய் பழகுவா என்று பார்த்தால் அதுவும் நடக்கவில்லை.

முதலில் இவளது துடுக்குத்தனத்தின் மீதிருந்த ஈடுபாடு குறைந்து, ரீச்சர் மற்றப் பிள்ளைகளையும் சமனாகக் கவனிக்க ஆரம்பித்தா. டெய்சி அடிக்கடி ரீச்சரின் மனங் கவரும்படி ஏதாவுதொன்றைச் செய்துகொண்டிருப்பாள்.

வசுமதி ரீச்சரின் சேலைத் தலைப்பைத் தூக்கித் தனது தலையில் போட்ட பழக்கத்தில் ஒருநாள், சக்தி ரீச்சரின் சேலைத் தலைப்பையும் இவள் தூக்கித் தன்மேல் போடப் பார்த்தாள்.

சக்தி ரீச்சர் துணுக்குற்றாற்போல அப்படியே சேலையை வாரி இழுத்துக்கொண்டா.





ரீச்சருக்குக் கோபமோ என அவள் பதறியபோது, அவளது முகத்தை வருடி, "சீலையெல்லாம் இழுக்கக்கூடா... போய் இருங்கோ இடத்திலை..." என்று அவளது இடத்தில் அமரச்சொன்னா. அம்மா கண்டித்து உதறுவதைக் காட்டிலும் இது அவளுக்கு அதிக ஏக்கத்தை ஏற்படுத்துவதாயிருந்தது.

அதற்குப் பிறகு இவள் ரீச்சரிடம் நெருங்குவதில்லை.

முந்தி என்றால் இவளுக்குப் பள்ளிக்கூடம் மிகக் கலகலப்பாக இருக்கும். இப்போது, இவளுக்குத் தன்னை முதன்மைப்படுத்தாத ரீச்சர் இருப்பதாலோ என்னவோ கலகலப்பில்லாமலே பாடங்கள் நகர்ந்தன. வீட்டிலும்கூட இப்போது முன்புமாதிரி அடிக்கடி வெளியே போகின்ற நிகழ்வுகள் இல்லை. மாமா இருந்தபோது அடிக்கடி புதுப்புது ஆட்களைத் தேடிக் குடும்பமாய்ப் போவார்கள். மாமா கல்யாணமான புதிசிலும் கொஞ்சநாள் அடிக்கடி வெளியே போக முடிந்தது. பிறகு அப்படி அதிகம் வெளியே போக முடிந்ததில்லை. மாமாவும், அத்தையும் எப்போதாவது வருவார்கள்.

மாமாவும் முன்னைமாதிரி அதிகம் இவளைக் கொஞ்சுவதில்லை. அத்தை மட்டும் இவளிடம் செல்லக் கதைகள் கேட்பாள் அவ்வளவே.

அம்மா எப்போதும் படி, படி என்றபடியேதான். இவள் கேட்கின்ற கேள்விகளை ஒரு தொண தொணப்பாகவே கருதி எப்போதும் ஒதுக்கிவிடுவாள். இவளிடம் நிறையக் கேள்விகள் இருந்தன.

நாளுக்கு நாள் யோசிக்க, யோசிக்க, ரீச்சர் தன்னைப் பார்க்க வந்தது உண்மைதான் எனும் எண்ணம் மலரிணிக்கு வலுக்க ஆரம்பித்தது. ஏன் இந்த அம்மாவும், ரீச்சரும் பொய் சொல்ல வேண்டும். அன்றைக்கு கோயிலில் வந்து எல்லாரும் ஒன்றாய்க் கதைத்தபோது, சக்தி ரீச்சர் இவளுக்கு "ஐஸ்கிரீம்" கோன் வாங்கித் தந்தது ஞாபகத்துக்கு வந்தது. அவ்வளவு நல்லாய்ப் பழகிவிட்டு இப்போது ஏன் ஒன்றுமில்லை என்று சொல்ல வேணும்...?

டெய்சி, மலரிணியின் முழியாட்டத்தைப் பார்த்துவிட்டு கொடுப்புக்குள் சிரித்தாள். அவள் அன்று காலைதான் ஒரு "ரோசாப்பூ"வைக் கொண்டு வந்து சக்தி ரீச்சருக்குக் கொடுத்திருந்தாள். ரீச்சர் அதைத் தலையில் வைத்திருந்தா.

மலரிணிக்குப் பொறுக்க முடியாமல் போனது.

"எனக்கு ரீச்சர் ஐஸ்கிரீம் வாங்கித் தந்தவ... தெரியுமே..." என்றாள் வீராப்பாக.

"சும்மா புளுகாதையும்... உமக்குத் தந்தால் எங்களுக்குத் தராமல் விடுவாவே ரீச்சர்..."

"இப்ப இல்லை... அவ இஞ்சை வரமுந்தி எனக்கு வாங்கித் தந்தவ. அவ எனக்குச் சொந்தம்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதை நீர்தான் சொல்லிக்கொண்டிரும். ரீச்சர் ஒத்துக்கொள்ளேல்லையே..." என்ற டெய்சி ரீச்சரை நோக்கிக் கத்தினாள்.

"ரீச்சர் மலரிணிக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் குடுத்தனீங்களாம்... எங்களுக்கு ஏன் ரீச்சர் வாங்கித் தரேல்லை..."

ரீச்சர், கொப்பிகளைத் திருத்துவதைவிட்டு, நிமிர்ந்து வகுப்பைப் பார்த்தா. கண்கள் சட்டென்று மலரிணியை ஏறிட்டன.

"இப்ப எண்டாலும் சொல்லுங்கோ ரீச்சர், நீங்கள் எனக்குச் சொந்தமெல்லோ..." மலரிணியின் கண்கள் ரீச்சரை இறைஞ்சின.

ரீச்சர், பட்டென்று பார்வையைத் திருப்பினா.

"நான் ஒருத்தருக்கும் ஐஸ்கிரீம் வாங்கிக் குடுக்கேல்லை... நான் ஒருத்தருக்கும் சொந்தமில்லை..."

பாடத்திற்கு மணி அடிக்க முதலே ரீச்சர் எழும்பி விறுவிறென்று வெளியே போய்விட்டா. பக்கத்திலிருந்தவர்கள் இவளை அசூயையோடு பார்த்தார்கள். முந்தின ரீச்சர் எவ்வளவு நல்லம்.

இப்பவும் நல்ல ரீச்சர்தான். ஆனால் அவளைத் தனியே கவனிப்பதில்லையே. வீட்டுக்குப் போனதும் மலரிணி ஓ... வென்று அழுதாள்.

காரணமில்லாமல் அழுகிறாள் என்பதில் அம்மாவுக்குச் சரியான கோபம். முன்பென்றால் தம்பி பார்த்துக் கொள்வான். இப்போது அவனும் மனைவிக்குப் பின்னால் திரிந்துகொண்டிருக்கிறான். புதிதாய்ப் பிறந்த குழந்தை வேறு அவனது கவனத்தைத் அதன் புறம் ஈர்த்திருக்கிறது.

"என்னத்துக்கெடி ஒப்பாரி வைக்கிறாய்..." என்றாள்.

"எனக்குப் புது ரீச்சர் வேண்டாம். பழைய ரீச்சர்தான் வேணும்..."

"ஏன் ரீச்சர் அடிச்சவவோ...?"

"இல்லை..."

"பேசிப் போட்டாவோ...?"

"இல்லை..."

"அப்ப என்னடி...?"

"அவ என்ரை சொந்தம் எண்டு சொல்லுறா இல்லை...."





"சொந்தம் என்டாத்தானை சொந்தம் எண்டு சொல்லுற... இல்லாட்டி என்னண்டு சொல்லுற..."

"அப்ப ஏன் என்னைப் பாக்க வந்தவ அவ..."

"எப்ப...?"

"முந்தியொருக்கா..."

அவள் காலத்தை விளக்குவதற்கு மிகச் சிரமப்பட்டாள்.

"சரி, நான் வாறன், நான் கதைக்கிறன் ரீச்சரோடை..."

மலரிணி சமாதானமாகக் கொஞ்ச நேரம் எடுத்தது.

************

அடுத்த நாள் சுபத்திரா, மலரிணியின் பாடசாலைக்கு வருவதாய்ச் சொல்லி இருந்தாள். இடைவேளையை அண்டிய வேளையில் குறுகிய விடுப்பில் மலரிணியின் பாடசாலைக்கு வந்தாள். அதிபரிடம்போய் விலாவாரியாய் மகளைப் பற்றிக் கதைத்தாள். அதிபர் மலரிணியையும், சக்தி ரீச்சரையும் அழைத்துவர ஆளனுப்பினார். முதலில் மலரிணி வந்துவிட்டாள். வந்தவள் சுபத்திராவின் கதிரைக்குப் பின்னால் ஒடுங்கினாள்.

கொஞ்ச நேரத்தில் சக்தி ரீச்சரும் கண்களில் கேள்வியோடு வந்து சுபத்திராவின் பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்தாள்.

பளிச்சென்ற முகத்தில் எந்தக் குழப்பமும் இல்லை.

"ரீச்சர்... மலரிணி உங்கட வகுப்புப் பிள்ளைதானை எப்பிடிப் படிக்குது...?" என்றார் அதிபர்.

சுபத்திரா கதிரையில் இருப்புக்கொள்ளாமல் நெளிந்தாள்.

"ஷீ இஸ் வெறி பிரில்லியன்ற்..." என்றாள் சக்தி ரீச்சர்.

"அப்ப ஏன் உங்களிலை, அவளுக்கு விருப்பம் வரேல்லை...?"

சக்தி ரீச்சர் நிமிர்ந்து சுபத்திராவைப் பார்த்தாள்.

"சில வேளை நான் கறுப்பெண்டதாலை என்னிலை விருப்பம் வரேல்லையோ தெரியா...?" சக்தி ரீச்சர் மிக மெல்லிய சிரிப்போடு சொன்னாள்.

"ஏன் மலரிணி இந்த ரீச்சர் வேண்டாம்...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் மலரிணியை முன்னால் அழைத்துக் கேட்டார்.

"ரீச்சர்தான் எனக்குச் சொந்தமில்லை எண்டு சொல்லுறா..."

"ரீச்சர்மார் எல்லாரும் சொந்தக்காரர் ஆகேலாதானை..." என்றாள் சக்தி ரீச்சர்.

"ஆனால், நீங்கள் எனக்குச் சொந்தம்தானை..."

"ஆர் சொன்னது அப்பிடி..."

"எல்லாரும் தான். நீங்கள், அம்மா, அப்பா, எல்லாரும்தான் சொன்னவை..."

"அது ஏதோ மாறிச் சொல்லிப் போட்டினை... நாங்கள் சொந்தமில்லை... என்ன ரீச்சர்... நாங்கள் சொந்தக்காரர் இல்லைத்தானை..."

சுபத்திராவைப் பார்த்து சக்தி ரீச்சர் கேட்டாள்.

சுபத்திராவிற்குப் பதில் பேசமுடியாமல் வாயடைத்தது.

"நான் போகலாம்தானை சேர்...?" என அதிபரிடம் அனுமதி கேட்டுவிட்டு சக்தி ரீச்சர் எழுந்தாள்.

அதிபர் சுபத்திராவைக் கேள்விக்குறியோடு பார்த்தார்.

"என்ன பிரச்சினை... நீங்கள்தான் சொல்லோணும்..."

சுபத்திரா மென்று விழுங்கிவிட்டுச் சொன்னாள்.

"என்ரை தம்பிக்கு உந்த ரீச்சரைக் கலியாணம் பேசி முற்றாக்கினாங்கள். கோயிலுக்கு எல்லாருமாய்ப் போய்க்கொண்டாடினாங்கள். அப்ப மலரிணிக்கு சொந்தக்கார அன்ரி எண்டுதான் சொன்னம்..."

"அப்ப சொந்தம் தானையம்மா...?" என்றாள் மலரிணி.

"பிறகு, இன்னொரு கலியாணம் கூடச் சீதனத்தோடை வந்தாப் போலை, பொம்பிளை கறுப்பெண்டு சொல்லித் தட்டிப் போட்டம்..."

"என்ன விசர் வேலை செய்து போட்டியள்..." என்றார்அதிபர்.

"அது நடந்து, இப்ப ஒரு வருசமாப் போச்சுது. அப்ப அன்ரி, அன்ரி எண்டு மனசிலை நினச்சிட்டுது மலரிணி. நானும் மறந்து போனன். அது இவ்வளவு நாளும் அதைத்தான் மனதிலை வைச்சு மறுகியிருக்குது...."



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



"நீங்கள் படிச்சனீங்கள்... உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை... இது உங்கட பிரச்சினை... நீங்கள் தான் தீர்க்கோணும்...." என்றபடி எழுந்தார் அதிபர்.

மலரிணி சுபத்திராவைக் கேள்விக்குறியோடு பார்த்தாள்.

"இனி எண்டாலும் ரீச்சரைச் சொந்தக்காரர் ஆக்கேலாதே...?" என்றாள் ஏக்கமாக.

"பேசாமல் வா..." என்றபடி அவள் கையை இழுத்துக்கொண்டு வெளியே வந்தாள் சுபத்திரா.

நீண்ட வராந்தாவின் மறு அந்தத்தில் சக்தி பாடம் முடித்து வந்துகொண்டிருந்தாள். அவளது நெற்றியில் பளிச்சென்றிருந்த கறுப்புப் பொட்டு சுபத்திராவை உறுத்திக் கொண்டேயிருந்தது!!!

(முற்றும்)

---

# தோல்வி ஒரு பொறி

யானைக்கு அங்குசமில்லை
அதன் தும்பிக்கையில்
எறும்பை விட்டு
தோல்விடையச்
செய்வான் - அவன்

குதிரைக்கு கடிவாளமில்லை..
முயற் குட்டியை வைத்து
வெல்ல வைத்து விடுவான்
குதிரைக்கு அருகில்
கோவேறு கழுதையை
கொண்டு போய் நிறுத்தி!

வேங்கையை வெல்ல
ஒரு வெள்ளாட்டை
அனுப்பி
நீருக்குள் உருவத்தைக்
காட்டி உருமச் சொல்வான்!
நரியை சிங்கமாக்கி
சிம்மாசனத்தில் அமரவைப்பான்..
கேட்டால்..
தானே மலையகத்தின்
சிந்தனையாளனின்
தலைவன் என்பான்!!!

● பூனாகலை நித்தியஜோதி

# சிதையாத இதயம்

**சிறுகதை**

பொத்துவில் மனாப்

கடையினுள் நுழைந்தவன் அதிர்ந்து போனான். தன் முன்னாள் காதலியை எத்தனையோ இடங்களில் சந்தித்திருக்கலாம். கோயில் திருவிழாவில் சந்தித்திருக்கலாம். நண்பனின் திருமணத்தில் சந்தித்திருக்கலாம். கடற்கரையில் சந்தித்திருக்கலாம். சந்தை கூடுமிடத்தில் சந்தித்திருக்கலாம். இவ்வளவு ஏன் மாலை வேலையில் மஞ்சள் பூச்சொரிந்து கிடக்கும் அந்த கொன்றை மரத்தடியில் சந்தித்திருக்கலாம். இப்படி ஏராளமான இடங்களில் சந்தித்திருக்கலாம். போயும் போயும் ஒரு நகை விற்க வந்த இடத்திலா சந்திக்க வேண்டும்? என மனதினுள் நினைத்தவாறே தன் விதியை நொந்து கொண்டான்.

எதிரே அமர்ந்திருந்தவளுக்கும் ஆச்சரியம் தாளவில்லை. பேசுவதற்கு வார்த்தை வரவில்லை என்றாலும் தட்டுத்தடுமாறி வார்த்தைகளை கூட்டிப் பொறுக்கி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசத் தொடங்கினாள்.

சொல்லு பாபு?

வார்த்தை அவனுக்கும் தான் வரவில்லை பின் எப்படிப்பேசுவது? குனிந்த தலை நிமிரவில்லை. குரலை சற்று உயர்த்தியவளாய் அவள் தான் கேட்டாள். சொல்லு பாபு என்ன விஷயமா இங்க வந்திருக்க?

மீண்டும் அமைதிகாத்தான். ஒரு பெண்ணை முதன் முதலில் சந்திக்கும் போதுதான் ஆண்மை கூட வெட்கமடையும் சில வேளைகளில் ஆனால் இவனுக்கு இங்கோ பார்த்து பார்த்து பழகிய பின்பும் கூட அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்க கூச்சமாகத்தான் இருந்தது.

பாபு நான் கேட்டுக்கொண்டிருக்கிறன் நீ பேசாமலேயே இருக்க.. என்ன நகை ஏதும் வாங்க வந்திருக்கிறியா?

உரிமையுடன் சற்று அதட்டலாகவே கேட்டாள். அதுவரைக்கும் குனிந்த தலை நிமிராதவன் தன் இயலாமையை மறைத்துக்கொண்டு சட்டைப்பைக்குள் கையைவிட்டு கொண்டு வந்திருந்த கடதாசிப் பொட்டலத்தை எடுத்து கண்ணாடி மேசை மீது வைத்தான்.

விற்கப் போறியா? என்று கேட்டவாறே கையில் கடதாசிப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தவள் அதிர்ந்தே போனாள். அந்த வினாடி இதயம் சுக்கு





நூறாக உடைந்து துகள்களாக சிதறியதை உணர்ந்தாள். ஐந்து வருடங்களுக்கு முன்பு மரணித்துப்போன இதயம் இப்போது இருந்த இடம் தெரியாமலேயே உடைந்து சிதறியதை உணர்ந்து கொண்டாள். காதலுக்குத்தான் எத்தனை மகிமை.

இதை விற்கப் போறியா பாபு?

ஆம் என்று தலையசைத்தான்.

மறுமொழி ஏதும் பேசவில்லை அவள். அப்ரைசறை வரச்சொல்லி பற்றுச்சீட்டு உடைத்து அதற்குண்டான பெறுமதியை அவன் கையில் கொடுக்கும்போது கேட்டாள்.

என் முகத்தை பார்க்க வேண்டும் என்று உனக்கு கொஞ்சம் கூட விருப்பமில்லையா பாபு?

அந்த ஒற்றைக் கேள்வியில் அவன் துடித்துப் போய் விட்டான். இறந்து போன அவனை மீண்டும் ஒருதரம் கொன்று புதைத்துவிட்டாள் அவள்.

சட்டென நிமிர்ந்து அவள் முகம் நோக்கினான். அவளின் ஒற்றை விழிப் பார்வைக்காக எத்தனை நாட்கள் தவம் கிடந்திருப்பான், அவள் இதழோர புன்னகைக்காக எத்தனை நாள் தூக்கத்தை தொலைத்திருப்பான், இது அவளுக்கும் தெரியும்தானே? இருந்தும் இப்படி கேட்டுவிட்டாள் அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

அவள் கருவிழி கரையோரம் கண்ணீர் அணைகட்டி நின்றது. வெளியே விழ காத்துக்கொண்டிருந்த கண்ணீர்த் துளிகளை யாருக்கும் தெரியாமல் கைக்குட்டையால் ஒற்றி எடுத்துக்கொண்டாள். வலுக்கட்டாயமாக புன்னகையை வரவழைத்துக்கொண்டு கேட்டாள்

வெளியே போய் டீ சாப்பிட்டுக்கொண்டு பேசுவோமா?

மறுக்க முடியவில்லை அவனால் கதிரையை விட்டு எழுந்துகொண்டான். கடையில் இருந்த வேலைக்காரப் பையன்களிடம் கடையை பார்த்திருக்க சொல்லிவிட்டு வெளியே சென்றவள் அவனையும் அழைத்துக்கொண்டு சாலையைக் கடந்து எதிர்ப்பக்கமிருந்த உணவகத்தை நோக்கி நடந்தாள். மத்தியான நேரமென்பதால் அந்த உணவகத்தில் கூட்டம் அதிகம் இருக்கவில்லை. ஆள் அரவமற்ற பகுதியில் தனியான ஒரு மேசையைப் பிடித்து எதிரும் புதிருமாய் அமர்ந்து கொண்டார்கள் இருவரும். உணவு பரிமாறுபவரிடம் அவளாகவே ஆர்டர் பண்ணினாள்.

ரெண்டு ஐஸ்கிறீம் கப் தாங்க..

சரிங்க மேடம்... என்றவாறே நகர்ந்தார் உணவு பரிமாறுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முகத்தை ஏறிட்டவளாய் கேட்டாள்.

சொல்லு பாபு... எப்படி இருக்க?

ம்ம்ம்... இருக்கன் நீங்க எப்படி?

என்ன திடிரென்று மரியாதை நீங்க வாங்க என்று?

இல்ல... அது.. வந்து அது வந்து நாக்கு வறண்டது அவனுக்கு.

வந்து போயெல்லாம் அப்புறம் இருக்கட்டும் இப்ப நீ என்றே கூப்பிடலாம் என்றாள் தீர்க்கமாகவும் தீர்மானமாகவும். கட்டளையை மீற இயலவில்லை சரியென்று தலையாட்டினான்.

உணவு பரிமாறுபவர் அவர்கள் கேட்ட ஐஸ்கிரீமை கொண்டு வந்துவிட ஆளுக்கொன்றாக எடுத்து சாப்பிட்டுக்கொண்டு பேசத் தொடங்கினார்கள்.

என்ன பாபு இப்ப என்ன பண்ணிக்கொண்டிருக்கிற?

ஆரம்ப பாடசாலை ஒன்றில் தொண்டராசிரியரா வேலை பண்றன்.

திருமணம் முடிச்சிட்டியா...? வீட்ல அம்மா தங்கச்சி எல்லாம் நலமா?

ம்ம்ம்... இருவரும் நலமாக இருக்கிறாங்க தங்கச்சி திருமணம் முடிச்சிப் போயிட்டா.

அப்படியா சொல்லவே இல்லை.

உன் தொடர்பு கூட இல்லையே அப்புறம் எப்படி சொல்றது ?

பரவால்ல பாபு உனக்கு எத்தனை குழைந்தைங்க இருக்காங்க? என்றாள்.

அவள் அப்படி கேட்பாள் என்று அவன் நினைத்திருக்கவில்லை... யாரோ அவன் தலையில் சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. விரக்தியில் சிரித்துக்கொண்டான்.

என்ன பாபு சிரிக்கிற?

இல்ல நீ கேட்டத நெனச்சன் சிரிப்பு வந்தது.

அப்படி என்ன கேட்டுட்டன் நான்.

எத்தன குழந்தைங்க என்று கேட்டாய்தானே.





ம்ம்ம்

அதனாலதான் சிரிச்சன்.

ஏன்?

எனக்கு இன்னும் கல்யாணமாகல்ல

என்ன பாபு சொல்ற நீ?

உண்மையாத்தான் சொல்றன்.

இப்போ உனக்கு முப்பத்திரெண்டு முடிஞ்சி முப்பத்திமூனு வயசு ஆகி இருக்குமே?

ம்ம்ம்

அப்போ இன்னுமா நீ திருமணம் முடிக்கல?

என் வயசு இன்னும் உனக்கு நினைவிருக்கா?

பின்ன இல்லாம போகுமா?

அதுவும் சரிதான்

கடைசியாக மிச்சமிருந்த கடைசிச்சொட்டு ஐஸ்கிரீமையும் சாப்பிட்டு முடித்தவனாய் பக்கெட்டில் இருந்த சிகரட் ஒன்றை இழுத்து பற்றவைத்தபடி புகையை ஆழ இழுத்து வெளியேவிட்டான்.

இன்னும் நீ இந்த பழக்கத்த விடலையா?

ம்ம்ம் ஹ்ஹ்ஹ்ஹ்... இதுதான் இப்போது எனக்கு இருக்கும் ஒரே துணை அதையும் எப்படி தள்ளிவைக்க முடியும்?

அவள் இதழ் ஓரத்தில் ஒட்டியிருந்த ஐஸ்கிரிமை இவனுக்கு தொட்டு துடைக்க வேண்டும் போல் இருந்தது. இவனின் தவிப்பை உணர்ந்து கைக்குட்டையால் அவளே துடைத்துக்கொண்டாள். அழகான பெண்கள் அவர்கள் செய்யும் சில விடயங்கள் மூலமாகவே எப்போதும் அவர்களை நினைவூட்டிக் கொண்டிருப்பார்கள் என்பது மீண்டுமொருமுறை நிஜமாயிற்று. ஐந்து வருடங்களுக்கு முந்திய நாளொன்றை இப்போது மீட்டிப் பார்த்துக்கொண்டான். என்னைப்பற்றி இவ்வளவு கேட்டியே உன்னைப்பற்றி சொல்லலையே...?

என்னைப் பற்றி சொல்வதற்கு ஒன்றுமில்லை பாபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ திருமணம் முடிச்சிட்டியா?

ம்ம்ம்... ஒரு குழந்தை இருக்கு

காலம் எவ்வளவு வேகமானது இவள் விஷயத்தில்தான் அறிந்து கொள்கிறான். படிப்பு முடிந்த பிறகு வேலை இல்லாமல் இருந்தேன். அப்போதுதான் இந்த வேலை கிடைத்தது. இந்த வேலையை ஏற்றுக்கொண்டேன். திருமணம் நிச்சயமாகி முடிந்துவிட்டது. இந்த ப்ராஞ்ச்ல ஒருத்தர் லீவு. ஒரு மாசத்துக்கு என்ன இங்க ப்ராஞ் மேனேஜரா அனுப்பி இருக்கிறாங்க அடுத்த சனிக்கிழமை நான் ஊருக்கு போயிடுவன். என்ட ஒரு மாசம் முடியுது. அதற்கிடையில உன்ன சந்திச்சது நான் செஞ்ச புண்ணியம்தான் வீட்ல அம்மா தங்கச்சிய கேட்டதாக சொல்லு. முடிஞ்சா அடுத்த சனிக்கிழமை இதே நேரத்துக்கு கண்டிப்பாக இங்க வந்திடு. உனக்காக இந்த இடத்தில காத்துக் கொண்டிருப்பன் என்றவாறே எனக்கு இப்ப நேரமாகுது பாபு பார்க்கலாம். அப்புறம் என்றவாறே எழுந்து கெசியரிடம் சென்று பில்லை செலுத்திவிட்டு வீதியைக் கடந்து கடைக்கு சென்றாள்.

ஒரு நிமிடம் அவள் செல்வதையே நின்று நிதானித்து பார்த்துக் கொண்டிருந்தவன் தன் வீடு நோக்கிப் புறப்பட்டான். எப்போது வீட்டை அடைந்தான் என்பதுகூட அவனுக்கு நினைவில்லை. மொத்தத்தில் அவன் நினைவே அவனிடம் இல்லை. எல்லாவற்றையும் அவளுடனே அவன் அனுப்பி வைத்திருந்தான்.

என்னடா பாபு நகையை வித்திட்டியா? என்று அம்மாவின் குரல் காதில் விழுந்தபோதுதான் சுய நினைவுக்கு வந்தவன் ம்ம்ம்... என்ற வார்த்தையை மட்டும் பதிலாகக் கொடுத்துவிட்டு வேக வேகமாக அறைக்குள் சென்று கட்டிலில் விழுந்தான். அப்படியே நினைவுகளை சற்று சுதந்திரமாக்கி பின்னோக்கி நகர்த்தினான்.

உலகில் நிறைவேறாமல் போன பலகோடி காதல்களில் அவனது காதலும் ஒன்று.

வீணாவும் பாபுவும் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப்பயின்றவர்கள் இருவரும் கலைத்துறை மாணவர்கள்தான். பாபு மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவன் வீணா கல்முனையை பிறப்பிடமாகக் கொண்டவள் எந்தவித தடங்கல்களும் இல்லாமல் அவர்களின் பல்கலைக்கழக காதல் ஐந்து வருடங்கள் வளர்ந்து இமாலயத்தை தொட்டது. இருவரின் நண்பர்களும்தான் இவர்கள் காதலுக்கு காவலிருந்து வளர்த்தும் விட்டனர். பட்டம் பெற்று வெளியாகிய ஒருமாதத்தில் ஒரு நாள் வீணாவிடமிருந்து போன் வந்தது. பாபு வீட்டில் எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்கடா நம்ம விசயத்த வீட்ல சொல்லிட்டன் பிலீஸ்டா நீ வந்து எங்க வீட்ல பேசுடா ப்ளிஸ் கெஞ்சினாள் வீணா..

**செய்தி**யைக் கேட்டதும் பதறிப்போய்விட்டான். அம்மாவிடம் சொல்வதற்குப்





பயம் தங்கையிடம் விஷயத்தை சொன்னான்.

இப்ப என்னண்ணா பண்ணப்போற?

அதாண்டி எனக்கும் தெரியல

சரி நீ கவலைப்படாம வீணா. வீட்டுக்குபோ என்று கூறியவளாய் தான் சேர்த்து வைத்திருந்த ஐநூறு ரூபா காசை அவன் கையில் திணித்தாள். கண்களில் நீர்மல்க பெற்றுக்கொண்டு அடுத்த ஒரு மணி நேரத்தில் இருந்தான் வீணாவின் தந்தை முன்.

சரி தம்பி நீங்க சொல்றது... என் பொண்ண உங்களுக்கு கட்டித்தந்தா நீங்க எப்படி வச்சுக் காப்பாத்துவீங்க? எல்லா தந்தைமாரும் கேட்கும் சாதாரண கேள்வியைத்தான் இவனிடமும் கேட்டார். இன்னும் ரெண்டு வருஷம் எனக்காக வெய்ட் பண்ணுங்க. அதுக்குள்ள எப்படியாவது தங்கச்சி கல்யாணத்தை முடிச்சிட்டு எனக்கொரு வேலையும் தேடிக்கொண்டு வீணா கழுத்துல தாலி கட்டுறன் என்றான் நப்பாசையுடன். வீணா ஒற்றைக் காலில் பிடிவாதமாக நின்றாள் அவன்தான் வேணுமென்று. இருவரின் பிடிவாதத்தையும் பார்த்த அவர் இரண்டு வருடங்கள் அவன் காதலுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்து தீர்ப்பளித்தார்.

அடுத்து வந்த இரண்டு வருடங்கள் வேகமாக கடந்தன. இவனும் வேலைக்கு முயற்சி செய்யாத நாளுமில்லை. ஏறி இறங்காத நிறுவனங்களும் இல்லை. வேலை கிடைக்கவுமில்லை தங்கையின் திருமணம் முடியவுமில்லை. அப்பாவை இழந்து விட்டிருந்த இவன் குடும்பத்துக்கு அம்மாவின் தையல்மெசின் மூலம் வரும் வருமானம் ஒன்றுதான் சோறு போட்டுக்கொண்டிருந்தது. ஒருநாள் வீணாவின் அப்பா இவனைக் கூப்பிட்டு,

இதோ பாருங்க தம்பி, வீணாவுக்கு வயசு ஏறிக்கொண்டே போகுது காலா காலத்துக்கும் அவள எங்களோட எப்படி வச்சுக் காப்பாத்துறது. எங்கட கடமைய நாங்க செய்யத்தானே வேணும். உங்களுக்கு தந்த ரெண்டு வருஷம் முடிஞ்சி போச்சு இப்ப வீணா உங்களுக்கு வேணுமென்றா எங்க வீட்டோட மாப்பிள்ளையா இருந்து விடுங்க. ஒரு ஆண் பிள்ளையின் தன் மானத்துக்கு விலைபேசினார். வீணாவின் தந்தை இவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதுக்கெல்லாம் நீங்க வேற ஆளைப்பாருங்க என்று ஒற்றை வார்த்தையில் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறியவன் ஐந்து வருடங்களின் பின் இன்றுதான் அவளைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறான். அதுவும் நகை விற்கப்போன அந்தக் கடையில். இப்போது கழிகிற ஒவ்வொரு நிமிடத்தையும் பெரும் பிரயத்தனப்பட்டே கழிக்கவேண்டி இருந்தது அவனுக்கு. இந்த ஐந்து வருட காலத்தில் அவன் சேர்த்து வைத்திருந்த சந்தோசமெல்லாம் இப்போது காணாமல் போயிருந்தது என்றே சொல்லமுடியும். அவனின் இதயத்துக்குள் எப்போதும் அவள் அழியாத உருவமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்பதை வீணா அறிவாளா என்பது அவனுக்கு சந்தேகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களின் நகர்வில் அவள் சொன்ன சனிக்கிழமையும் வந்தது. அன்று கொஞ்சம் சீக்கிரமாகவே விடிந்துவிட்டது போன்ற உணர்வு அவனுக்குள். காலை உணவைக்கூட சாப்பிட மறந்து சிட்டெனப் பறந்தான் அவள் சொன்ன அந்த உணவகத்துக்கு. அவனுக்கு முதலே வீணா அங்கு வந்துவிட்டிருந்தாள். கையில் இருந்த கடிகாரத்தை பார்த்தான். பதினொரு மணியாவதற்கு ஐந்து நிமிடங்களே பாக்கி என்று காட்டியது. இவனைக் கண்டதும் புன்னகையை தவழ விட்டபடி எழுந்து வந்தாள்.

என்ன இவ்வளவு லேட்டு ரொம்ப தூங்கிட்டாயா இன்னிக்கு..? சற்றே கிண்டலாய்க் கேட்டபடி முன்னே நடக்க இவன் பின் தொடர்ந்தான்.

நான் தூங்கி ரொம்ப நாளாச்சு வீணா ஒன்னப் பார்த்த சந்தோசத்துல இன்னிக்கு கொஞ்சம் அதிகமாகவே தூங்கிட்டன் உண்மைதான் என்றான்.

உன் சின்னச் சின்ன பொய்கள இன்னும் நீ விடவே இல்லையாடா ராஸ்கல் என்றபடியே இப்போது அருகே நெருங்கி வந்திருந்தாள். இவனுக்கு சுவாசிக்கவே கஷ்டமாக இருந்தது. சற்று விலகிக்கொண்டான் இடைவெளிவிட்டு. வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது. கடந்தகால நினைவுகள் சிலவற்றை மீட்டிப் பேசிக்கொண்டு பத்து நிமிட நடையில் பஸ் தரிப்பிடத்தை அடைந்தனர். அவள் செல்ல வேண்டிய பஸ் வண்டியும் தயாராகத்தான் நின்றது இவளுக்காகத்தான் காத்திருப்பதுபோல்...

பாபு... அதிகம் சிகரட் பிடிக்காதே.. சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோ வயசாகிக்கிட்டே போகுது பொண்ணு கிடைக்கிறது கஷ்டம். எதையும் யோசிச்சு மனச போட்டு குழப்பிக்கொள்ளாதே நல்லவர்களை கடவுள் எப்பொழுதும் கை விடமாட்டார். அம்மாவ கவனமாக பார்த்துக்கொள் என்று மூச்சு விடாமல் அவசர அவசரமாக சொல்லிக்கொண்டே தோளில் இருந்த கைப்பைக்குள் கையைவிட்டு ஒரு கடதாசிப் பொட்டலத்தை எடுத்து அவன் கைக்குள் திணித்தவாறே பஸ்ஸினுள் ஏறி ஜன்னல் ஓர இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டு கண்கலங்கியவாறே அவனை நோக்கி கையசைத்தாள்.

அவனும் கவலையை கஷ்டப்பட்டு மறைத்துக்கொண்டு சரிங்க பாட்டி நீங்க சொன்னபடியே நான் நடந்துக்கிறேன் என்றவாறே புன்னகையால் விடை கொடுத்தான் அவளுக்கு. பஸ் வண்டியும் புறப்படவே அதையே கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். பஸ் வண்டியின் சிவப்பு விளக்கு அவன் கண் பார்வையில் இருந்து மறைந்ததும் பக்கத்தில் இருந்த பஸ் தரிப்பிட கூரையின் அடியில் மழைக்காக ஒதுங்கிக்கொண்டு அவள் கொடுத்த பொட்டலத்தை பட படக்கும் இதயத்தோடு பிரித்தவன் கண்கள் கண்ணீரால் கழுவப்பட்டன. அவன் விற்ற அதே மாலை அந்த கடதாசிப் பொட்டலத்துக்குள் வைத்து மடிக்கப்பட்டிருந்தது. அதனுடன் சேர்ந்தது போல் ஒரு கடிதம். கலங்கிய விழிகளுடன் படிக்கிறான்.

அன்புள்ள பாபு!
ஆண்கள் காதலில் தோற்றுப்போனால் கதை எழுதலாம். கவிதை எழுதலாம். சினிமா எடுக்கலாம். இவ்வளவும் ஏன் தனக்கு வரப்போகிற மனைவியிடம் தன் பழைய காதலை சொல்லி என் புருசன் எங்கிட்ட எதையும் மறைக்காதவர் என்ற நல்ல பெயர் கூட எடுக்கலாம். ஆனால் பெண்கள் ஊர் உறங்கும் இரவில் ஜன்னல் வழியே தெரியும் நிலவை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டு கண்ணீர் விடுவதை தவிர வேறு வழியில்லை. உன் பிரிவை நினைத்து எவ்வளவு வேதனைப்பட்டேன் தெரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன்னை மீண்டும் பார்த்த அந்தநொடி உன்னை கட்டிப் பிடித்து நம் பழைய காதல் கதைகளைக் கூறி கஷ்டங்களை பகிர வேண்டும் போல் இருந்தது. அப்படி செய்தால் அது நம்மை தவறான பாதைக்கு இட்டுச் சென்றுவிடும் என்ற பயத்தில் நான் என்னை கட்டுப்படுத்திக் கொண்டேன். இத்துடன் நீ விற்ற மாலையை வைத்துள்ளேன். அதை நான் மீட்டு விட்டேன். அது நிறைவேறாத என் காதலின் அடையாளமாக எப்போதும் உன்னிடம் இருக்கவேண்டும். நீ முதல் முதல் எனக்கு பரிசாகத் தந்த கொலுசை அது கறுத்துப் போனாலும் இன்னும் பத்திரமாக என்னுடனே வைத்திருக்கிறேன். இந்த மாலையை இன்னுமொரு முறை விற்க முயற்சிக்காதே பாபு. நம்மைப் போன்ற தோல்வியுற்ற காதலர்களுக்கு அவைகள்தான் காதல் சின்னங்கள். மீண்டும் எங்கேயாவது ஒரு இடத்தில் எப்போதாவது இதேபோல் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையில் உன்னிடமிருந்து விடைபெறுகிறேன்.

இப்படிக்கு
வீணா

கடிதத்தை படித்து முடித்தவன் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவன் கையில் இருந்த கடிதத்தை நனைத்தது மழைத்துளியுடன் சேர்த்து!!!


# வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 500/= வை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்!

- ஆசிரியர்

# அவள்



● கலைமகன் பைரூஸ்

தினமும் நான்
கல்லூரியிலிருந்து
பாதையைக் கடக்கும்போது
காண்கிறேன் அவளை!
கருணை ஒளிவீசுகிறது
அவளது
சிறிய கண்கள்!
ஏதோ சொல்ல நினைக்கின்றன
அவை!

அவளோ
என்னைப் போன்ற
சிறுமி!
ஆனால்
என்னிலிருந்து வேறுபடுகிறாள்
அவளோ
எப்போதும் இருப்பது
சாலை ஓரத்தில்...!

அவள்
தெருவீதியில் இருக்க
கடந்து செல்கின்றன
ஆயிரமாயிரம்
கண்கள்!
ஆனால்
ஒரு "செக்க"னாவது
தரித்துச் செல்வாரில்லை!
அவள்
ஏதோ பேச நினைக்கிறாள்!!

அவளுக்கு
உற்ற துணை யாருமில்லை
நண்பர்களில்லை
ஆனால்
அவளைப் பற்றி
என் மனம்
ஏதோ பேசுகிறது
அவளுக்காக
உதவ வேண்டுமென்று!

தினந்தோறும்
அவளையே நான்
நினைக்கிறேன்
அவளது கருணைக் கண்கள்
நிழலாடுகின்றன!
அவளது சிந்தனையில்
மாற்றம் ஏற்படுத்த
என் மனம்
ஏங்குகிறது!
அவள் வாழ்வில்
புதியதொரு பக்கத்தை
புரட்ட மனம்
விரும்புகிறது!

நிச்சயமாக
நான் அவளுக்கு உதவினால்
அவள்
யாருடனும் இல்லாத
அன்பைச் சொரிவாள்!
அவளுக்காக
நான் பிரார்த்திக்கிறேன்!
அவளும்
நானாக இருக்க....!





# பேரும் புகழும் நாடித்தேடி ஓடும் மனிதன்

நுணாவிலூர் கா. விசயரத்தினம் (இலண்டன்)

உலக மக்கள் அனைவரும் விடாமுயற்சியுடன் செயற்பட்டுத் தமது பொருளாதாரத்தில் முன்னிலையடைய விரும்புகின்றனர். அதனால் இவ்வுலகம் முன்னேறி வருகின்றது. ஒரு நாட்டின் நிலை அந்நாட்டிலுள்ள மக்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. நாடானால் என்ன?, காடானால் என்ன? மேடானால் என்ன?, பள்ளமானால் என்ன? எவ்விடத்தே நல்ல மக்கள் விளங்குகின்றனரோ, அவ்விடத்து நிலமும் நன்றாக விளங்கும். நிலத்தைப் பொறுத்ததல்ல வாழ்வும் தாழ்வும். அந்தந்த நிலத்து மக்களைப் பொறுத்ததே வாழ்வும் தாழ்வும் என்று சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு செப்புகின்றது.

**நாடா கொன்றோ் காடா கொன்றோ்**
**அவலா கொன்றோ் மிசையா கொன்றோ்**
**எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே! ஔவையார் (187)**

**எவ்வழி நல்லவர் ஆடவர்** என்ற புலவர் கூற்று இங்கு நோக்கற்பாலது. ஆடவரது ஒழுக்கமே உலக மேம்பாட்டிற்கு அடிப்படையாகும். அதனாற்றான் அந்நாளில் உலகை **ஆண்கள் உலகம்** என்றனர் போலும்.

பேரும் புகழும் நாடித் தேடி ஓடாத மனிதன் இல்லையென்றே கூறலாம். இதற்கு அவனில் இருந்து ஊறும் ஆசைநீர் ஊற்றுத்தான் காரணமாகும். இஃது இயற்கை வழி நின்ற மரபியல் உந்தலாகும். அதனால் அவன் மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை கொண்டு நகர்கின்றான். மேலும் இவற்றுடன் பேராசையும் பிடித்துப் பேரும், புகழும் வேண்டிப் படாத பாடுபட்டுத் தவிக்கும் மனித சமுதாயத்தையும் காண்கின்றோம். இருக்கும் நிறைவில் தரித்திருந்து மனம் மகிழமுடியாதவனாய்த் தத்தளிக்கும் நிலையால் அவன் அடையும் பயன் ஒன்றும் இல்லையெனலாம்.

இனி, பேரும் புகழும் பற்றி இலக்கியங்கள் கூறும் பாங்கினையும் காண்போம்.

**திருக்குறள்**

* இரந்து வரும் ஏழைகளுக்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றுமில்லை.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு. (குறள் 231)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இந்த உலகத்தில் உயர்ந்த புகழைத் தவிர அழிவில்லாமல் நிலைத்திருப்பது வேறொன்றும் இல்லை.

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன்று இல். - (குறள் 233)**

* புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ்நிலை நிற்பதாகும் சாவும், அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை.

**நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லால் அரிது. - (குறள் 235)**

* எக் காரியத்தில் தோன்றினும் அதில் புகழுள்ளவனாய் வரவேண்டும். அஃதின்றேல் அதில் தோன்றாதிருப்பது நல்லது.

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்தோன்றலின் தோன்றாமை நன்று. - (குறள் 236)**

* புகழ் பெற வேண்டும் என்ற உணர்ச்சி இல்லாத மக்கள் நிறைந்த நாடு, செல்வ வளம் குன்றிய நாடாகத்தான் இருக்கும்.

**வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம். (குறள் 239)**

* புகழ் தேடாவிடினும் குற்றம் புரியாதிருப்போரே வாழத் தெரிந்தவர்கள். உள்ள புகழ் அழிந்து போகும்படி வாழ்வோர் வாழத் தெரியாதவர்களே!

**வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர். (குறள் 240)**

இவ்வாறு திருவள்ளுவர் அறநெறி நின்று தாம் யாத்த முப்பாலில் **புகழ்** பற்றி ஓர் அதிகாரத்தில் கூறிச் சென்றுள்ளார்.

**இதிகாசங்கள்**

இராமாயணத்தில் இராவணன் கடுந் தவமிருந்து **முக்கோடி வாழ்நாளும், எக்கோடி யாராலும் வெல்லப்படாய்** என்ற வரமும் பெற்றுப் பல்லாண்டுகள் அரசோச்சிப் பேரும் புகழும் பெற்று வாழ்ந்தவன்.

**முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய**
**பெருந்தவமும் முதல்வன் முன்நாள்**
**எக்கோடி யாராலும் வெல்லப்படாய்**
**எனக்கொடுத்த வரமும் ஏனைத்**

இந்து வீரகாவியங்களான இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் வல்லமை பெறுதல், பேர்புகழீட்டல், அயல் நாடுகளைத் தம் ஆதிக்கத்தில்





வைத்திருத்தல், அரசின் பொது வாழ்வு வளம் சிறத்தல், போர் புரிந்த பழி நீக்கல் போன்றவற்றிற்காகக் குதிரையாகம் செய்யப்பட்ட செய்திகளும் காண்கின்றோம். இன்னும் அக்காலத்தில் உயிர்ப் பலியிடல் ஒரு சர்வ சாதாரண நிகழ்வாக உள்ளதையும் அறிகின்றோம். இவ்வாறான யாகங்கள் மன்னர்களால் மட்டும்தான் செய்யப்படலாம் என்பது ஒரு சிறப்பு விதியாகும்.

**தொல்காப்பியம்**

கல்விச் சிறப்பு, தறுகண்மை (அஞ்சாமை), புகழ்மை, கொடைத் தன்மை என்று சொல்லப்பட்ட நான்கு வகையாலும் பெருமிதமானது உண்டாகும் என்பது தொல்காப்பியர் கூற்றாகும்.

**கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே. (பொருள் 253)**

வாட்போரில் எதிர்த்து நின்ற பகைவனை எதிர்கொண்டு வெற்றிவாகை சூடிய அரசிளங்குமரனை அந்நாட்டு மக்கள் புகழ்ந்து பாராட்டிப் பறை முழக்கி அவனுக்கு அரசைக் கொடுத்துக் கொண்டாடினர். இன்னும் போர்க் களத்தில் வீரச் சாவெய்திய போர்வீரர்களின் நினைவாக நடுகல் நட்டு, அதைக் கோயிலாக எழுப்பி, அதில் அவர் பீடுகளைத் தீட்டி, அக் கல்லிற்குப் பெருஞ் சீரும் சிறப்பும் செய்து, நடப்பட்ட கல்லினைத் தெய்வமாகப் போற்றி, வணங்கி, வாழ்த்தி வந்துள்ள செய்திகளைத் தொல்காப்பியத்தில் படிக்கின்றோம்.

**வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க**
**நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்**
**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று (பொருள் 63-17-20)**

**அகநானூறு**

போரில் இறந்துபட்ட கரந்தை வீரர்களின் பெயர், போர்ப்பெருமை, புகழ், கீர்த்தி யாவும் எழுதி, மயிற்பீலி சூட்டி, பாலை நிலத்தில் உயர்ந்த நடுகற்கள் நாட்டப்பட்டு, அவர் பிடித்திருந்த வேலை அந் நடுகல்லருகில் நாட்டி, கேடயங்களும் அதன்கண் சார்த்தப்பட்டிருந்த காட்சிகளை **அகநானூற்றில்** காண்கின்றோம். இவ்வாறு நடுகல் நட்டு, நாட்டைக் காத்த போர்வீரரைப் போற்றிப் புகழும் பழந்தமிழர் மரபு காணீர்.

**ஆடவர் பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டி பிறங்குநிலை நடுகல்**
**வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்**
**வெருவரு தகுந கானம். - (131-10-13)**

**புறநானூறு**

பகைவர் கவர்ந்த ஆநிரைகளை மீட்டுக் கொணர்ந்த போரில் கரந்தை மறவர் இறந்துபட்டனர். அவர்தம் வீரம், புகழ் போற்றி, மயிற்பீலி சூட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலின்கீழ் நடப்பட்ட நடுகல்லில் அவர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளமை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான **புறநானூற்றின்** காட்சியாகும்.

**மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி**
**இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்**
**படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே. (260-26-28)**

**பேர் - புகழ் தேடும் வழிமுறைகள்**

தம் நலம் கருதிப் பேரும் புகழும் தேடுவோர் பலர். தம்மை மறந்து பிறர் நலம் கருதி வாழ்வோர் ஒரு சிலர். தம் நாட்டுக்காகவும், சமூகத்துக்காகவும் வாழ்ந்து மாண்டோர் இன்னொரு சிலர். இறைப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து மக்களை ஆற்றுப்படுத்தியோர் வேறொரு சிலர். இன்னும், பேரும் புகழும் அடைவதற்கு இவ்வுலகில் பல்வேறுபட்ட துறைகளும், முறைகளும் உள்ளன. இவை பற்றிச் சற்று விரிவுபடுத்திப் பார்ப்போம்.

* மன்னர் வரிசையில் மூவேந்தரான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பேரும், சீரும், புகழும் பெற்றுச் சேர, சோழ, பாண்டிய நாடுகளைச் செவ்வனே நல்லாட்சி புரிந்து வந்தனர். ஆனால், இடையில் அவர்கள் போர் வெறி கொண்டு ஒருவர்மேல் ஒருவர் பொருதி நாடுகளையும் அரசையும் இழந்து தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டனர்.

* முற்றும் துறந்த முனிவர்களும் பேரும் புகழும் நாடி மலையுச்சிக்கும், காட்டுக்கும் சென்று, கடும் தவமிருந்து, வரம் பல பெற்று, எதிர்கொள்பவரைச் சபித்து, மாமுனிவர்களாக மாண்புடன் வாழ்ந்தனர். இவர்கள் மத்தியில் போட்டா போட்டிகளும், நான் பெரிது, நீ சிறிது என்கிற அகங்காரங்களும் மலிந்திருந்ததையும் நாம் காண்கிறோம்.

* கர்ணன், பாரி போன்றோர் இரந்து வருவோர்க்கு இல்லையெனாது வாரி வழங்கிக் கொடை வள்ளல்கள் என்று பெயரீட்டிப் புகழ் பெற்றிருந்தனர்.

* 'சங்க காலத்தில் வாழ்ந்த அகத்தியனார், இறையனார், குன்றெறிந்த முருகவேள், நிதியின் கிழவன், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழிமோசி, வெள்ளர்க்காப்பியன், திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தையார், சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், நக்கீரனார், அறிவுடையரனார், இளந்திருமாறன் ஆகியோர் சங்கத்திலிருந்து தமிழ்ப்பணி ஆற்றிப் பேரும் புகழும் பெற்ற புலவர்களாய் விளங்கினர்.

* பற்பல துறைகளில் தம் விடாமுயற்சியை முன்வைத்து, உலகச் சாதனை நிலைநாட்டி, மேதையர் பட்டியல் நூலில் இடம் பெற்று உலகப் புகழீட்டிப் பெருமையடைகின்றனர் பலர்.

* பணம் படைத்த பலர் எவ்வித முயற்சியும் இன்றிப் பணத்தை வீசிப் பற்பல நன்மைகளைப் பெற்றுப் பேரும் புகழுடன் நற்பிரசைகளாக நடமாடுவதையும் நாம் காண்கின்றோம்.

* **கம்பன்,** வள்ளுவர், இளங்கோ, போன்ற புலவர்கள் தமிழுக்கு ஆற்றிய **பெருஞ் சேவையை உ**லகம் நன்கறியும். தேசிய கவி பாரதியார் அவர்களைப் **பற்றி இவ்வண்ணம்** பாத்தொடுத்துள்ளார்.





**யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்**
**வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை.**

* காந்தி, யேசு, புத்தர், நபிநாயகம் போன்றவர்கள் தம் நாட்டுக்கும் மதத்துக்கும் ஆற்றிய சேவையை இன்றும் மக்கள் தம் மனதில் நிறுத்தி அவர்களைத் தெய்வமாக வழிபட்டு நிற்கின்றனர்.

* திருமுறைகள் பன்னிரண்டும், அறுபத்து மூன்று நாயன்மாரும், பதினெண் சித்தர்களும், திருவள்ளுவரும் அருளித் தந்த தேவாரம், கோவை, திருவாசகம், திருமந்திரம், திருக்குறள் ஆகியவை தமிழின் புகழையும் பெருமையையும் பாரறிய எடுத்துக் கூறி நிற்கின்றன.

* விஞ்ஞானிகள், தத்துவமேதைகள், ஆய்வாளர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள் போன்றோர் நாட்டுக்கும், மனித குலத்துக்கும் ஆற்றும் அரும் பெரும் சேவைகள் விலைமதிப்பில் அடங்காதவை. இவர்கள் மேன்மை கருதி, இவர் இறந்தவிடத்தும் இருப்பவர்களாகவே கணிக்கப்படுகின்றனர்.

* வன விலங்குகளான யானை, சிங்கம், புலி ஆகியவை பேரும் புகழும் பெற்று காட்டில் நிலமமைத்து இராசாக்களாக ஆட்சி புரிந்து வருகின்றன. மற்றைய மிருகங்களெல்லாம் அவற்றின் பிரசைகள் போல வாழ்ந்து வருகின்றன.

* திருட்டுத் தொழிலில் பேரும் புகழும் பெற்றவர்களை நாம் அறிவோம். இவர்களிடம் பலர் வந்து பாடம் கேட்டுப் படிப்பதுண்டு. இவர்கள் ஒரு குழாம் அமைத்துத் தொழில்படுவர். முதலற்ற வியாபாரம் செய்கின்றனர். இது ஒரு பாவத் தொழிலாகும். ஈற்றில்' அறுவடை செய்வதற்கு ஏதுமின்றித் தவிப்பர்.

* பணத்துக்காகப் படு கொலை செய்பவர்களும் பேர் புகழ் பெற்று வாழ்கின்றனர். இவர்களை என்றாவது பழி சூழ்ந்துநின்று அழித்துவிடும்.

* அரசியல் வாதிகள் தம் மக்களை ஏமாற்றிப் பொய்யுரை கூறிப் புகழுடன் நடமாடுவதையும் நாம் பொதுவாக அறிவோம்.

* சில பெண்கள் பேரும், புகழும், பணமும் ஒருங்கே பெறும் இன்னொரு வழியும் உண்டு. உதாரணத்துக்கு, பணம் படைத்த உலகப் பேரழகி ஒருத்தி எட்டுத் திருமணங்கள் புரிந்து அவ்வெட்டையும் விவாகரத்துச் செய்து விட்டு, அவளது எழுபதாம் (70) அகவையில் ஒரு நாற்பது (40) வயதுப் பையனைத் திருமணம் செய்து புகழ் பெற்றாள், என்பது செய்தி.

சில விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நாட்டையும் மக்களையும் அழித்தொழித்து விடுகின்றன. இதற்கு உதாரணமாக அல்பேட் ஐயன்ஸ்ரைன் உதவிக் கண்டுபிடிக்கப்பட்ட அணுகுண்டைக் கூறலாம். நாம் நிலைநாட்டும் உலக சாதனைகளும், விஞ்ஞானப் புதிய கண்டுபிடிப்புகளும், உலகத்துக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடியனவாய் அமைதலே உண்மைப் புகழ் தரும் என்று கூறலாம்!!!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கவி



(வயல் காவலுக்கு நின்றிருக்கும் ஒரு இளைஞன், தனது துணையை நினைத்து ஏங்கும் பாடல்)

காவலிலே நின்றிருக்கேன்
கனநாளாத் தானிருக்கேன்
கோவம்பழ நிறத்தழகி
ஒன் சேதி ஒன்னும் தெரியலையே!

கதிர் கொடல
காய் வணக்கம்
காண வர நேரமில்லை

ராப் பகலா
ஒன் நெனவு
என் நெஞ்சமெல்லாம்
வாட்டுதடி!

பசும்பால காய்ச்சி வெச்சி
பச்சரிசி சோறாக்கி
பாவ ஒன்ன
நெனச்சி வுட்டன்
பசியெல்லாம்
போச்சுதடி!

புள்ளய பாக்க
கொள்ளயாக ஆசயடி
செல்ல மொழி கேட்க
நானும்
சிக்கிரமா வந்துருவேன்!

சித்திரமே
கலங்கி நீயும்
சிதைந்துதான்
போகாதே!!!

● பி.ரி. அஸீஸ் - கிண்ணியா 07





# இன்னும் உன் குரல் கேட்கிறது

## நூல் மதிப்பீடு

வெலிகம ரிம்ஸா முஹம்மத்



உதட்டில் ஒன்றோடும்
உள்ளத்தில் வேறொன்றோடும்
புரட்டுக்கள் புரியாத
புனித மனம் கொண்டோருக்கு

இன்னும் உன் குரல் கேட்கிறது என்ற தனது கன்னிக் கவிதைத் தொகுதியை சமர்ப்பித்திருக்கிறார் ஊவா மாகாணத்தின் தியத்தலாவையை தனது சொந்த இடமாகக் கொண்ட கவிஞர் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா அவர்கள். புரவலர் புத்தகப் பூங்காவின் 30 ஆவது வெளியீடாக மலர்ந்திருக்கும் இத்தொகுதி 72 பக்கங்களில் 56 கவிதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

கவிதை, சிறுகதை, விமர்சனம், சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் தடம்பதித்திருக்கும் இவர் பூங்காவனம் என்ற காலாண்டு இலக்கியச் சஞ்சிகையின் துணை ஆசிரியராவார்.

கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர் கனி அவர்கள் தனது ஆசியுரையில் கீழுள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.

மலையக மண்ணின் மங்கை - கவிஞை
செல்வி எச்.எப். ரிஸ்னா என்பா(ள்)ர்
நிலையிலா உலகில் தன் பெயர் நிலைத்திட
நெஞ்சமர் கவிதை நிறையவே தந்தார்.

திறந்த கதவுள் தெரிந்தவை என்ற தலைப்பிட்டு கவிஞர் ஏ.இக்பால் அவர்கள் தனது அணிந்துரையில் 'ஒப்பீடு, குறியீடு இவ்விரு முறைகளிலும் குறியீடுதான் கருத்தை செம்மையாக வெளிப்படுத்தும். இப் படிமம் வாசகனை உணரவைக்கும். இக்கருத்தை இத்தொகுதியில் அதிகம் காணலாம். ரிஸ்னாவின் கவிதைகளில் கற்பனை, புதிய பார்வை, பாதிப்பு மூன்றும் கலந்துள்ளன' என்கிறார்.

**நீ வாழ்வது மேல்** (பக்கம் 13) என்ற கவிதை போலி முகம் காட்டிப் பழகும் மனிதர்களுக்கு சாட்டையடியாக விழுந்திருக்கிறது. தன்னை நல்லவன் என்று காட்டிக்கொண்டும், தனக்கு உதவியவர்களை மறந்தும் வாழும் பலருக்கு இக்கவிதை பொருத்தமான அறிவுரையைப் பகிர்ந்து நிற்கிறது. நாம் பழகும், அல்லது பழகிய பலரில் நமக்குத் தெரியாமலேயே பொறாமைக் குணம்கொண்டு குழி வெட்டுபவர்கள் இருக்கின்றார்கள். அத்தகையவர்களை கண்டாலே விலக வேண்டும் என்கிறார் கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதாரம் பூசாமல்
பழகு - தீயவர் உன்னருகே
வந்தாலே விலகு..
சமூகத்தில் பலபேரு
ஏமாற்றக் காத்திருப்பர்
இது தானே இன்றைய உலகு..
இதையறிந்தாலே உன் வாழ்வு அழகு!

கற்பு என்பது ஆண் வர்க்கத்துக்கும், பெண் வர்க்கத்துக்கும் பொதுவானது. ஆனால் பெண்கள் சருக்கினால் சரித்திரம், ஆண்கள் சறுக்கினால் சம்பவம் என்று கணித்து வைத்திருக்கிறது இந்த குருட்டு சமூகம். எதுவென்றாலும் உத்தமமானவர்கள் ஆண்களிலும் இருக்கிறார்கள். பெண்களிலும் இருக்கிறார்கள். அத்தகைய தூய மனம் கொண்ட ஒரு ஆணின் மனது **மழை ப்ரியம்** (பக்கம் 16) என்ற கவிதையில் இவ்வாறு திறந்திருக்கிறது.

நகம் கூட உனைத் தவிர
பிற பெண்ணில் பட்டதில்லை..
உன்னையன்றிய எவளையும்
மனசாலும் தொட்டதில்லை!

பெற்றோரை, குடும்பத்தினரை, சொந்த ஊரை எல்லாம் விட்டு இன்று தலை நகரில் வந்து தமக்கான அடையாளத்தை பலர் பதிய வைக்கின்றார்கள். அவ்வாறு தனது ஆளுமையை பதிய முனையும் பலபேர்களில் கவிஞரும் ஒருவர் என்பது இக்கவிதையினூடே புலப்படுகின்றது. **உம்மாவுக்கு** (பக்கம் 17)

உம்மா!
பிடிக்கவில்லை..
ஊரில் நீங்களும்
தூரத்தில் நானுமாய்
இருக்கும்
இந்தக் காலங்கள்!

...............
என் வாழ்க்கையின்
வெற்றிப் படிகளை எட்டி
நானொரு நாள்
முன்னேறி வருவேன்..
அதுவரை கொஞ்சம்
பொறுத்திருங்கள்..
வாப்பாவுக்கும் சொல்லுங்கள்!

ஒரு பெண் சுமங்கலியாய் வாழும்போது வாழ்த்தும் பலபேர் அவள் அமங்கலியாகிவிட்ட பின்பு திருமணங்கள், திருவிழாக்கள் போன்ற இடத்துக்கும் அண்ட விடுவதில்லை. சபிக்கப்பட்டவர்கள் போன்று அவர்களை ஒதுக்கி விடுகின்றார்கள்.





தனது துணைவிக்கு அவ்வாறானதொரு நிலைமை வந்துவிடக் கூடாது என்பதில் அக்கறைக் காட்டும் மரண அவஸ்தையிலிருக்கும் அன்புக் கணவனின் வேண்டுகோளாக **ஒரு வீணை அழுகிறது** (பக்கம் 30) என்ற கவிதை எழுதப்பட்டிருக்கிறது. இன்றைய காலத்தில் விதவைகள் மறுமணம் புரிவது மெல்ல மெல்ல ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவது வரவேற்கத்தக்கதாகும்.

வெள்ளாடை தரித்து நீ
வெறுமனே இருந்திடாதே..
வாழும் வரை வசந்தமாய்
வாழுவதை மறந்திடாதே!

எச்.எப். ரிஸ்னாவின் கவிதைகளில் பல, சந்தக் கவிதையாக எழுதப்பட்டிருப்பவை. இது அவரது தனித்துவ அடையாளமாகும். ஓசை நயமும், சந்தமும் இணைந்து எழுதப்படும் கவிஞரின் எல்லா கவிதைகளும் தங்கு தடையின்றி எளிமையான நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. முதல் முறை வாசிக்கும்போதே மனதைத் தொட்டுவிடும் வல்லமை ரிஸ்னாவின் கவிதைகளுக்கு உண்டு. அவ்வாறான ஒரு கவிதையின் சில வரிகள் இதோ... (**மரணத்தின் தேதி** - பக்கம் 45)

இத்தனை நாள்
பார்த்த நிலா
ஒளி மங்கி வீசும்..
இதயத்தின் பாகமெல்லாம்
தீ கருகிய வாசம்!

உன் மாற்றம் என்னுள்ளே
தீயள்ளி போடும்..
உன் நினைப்பு
என் உயிரின்
அந்தம் வரை ஓடும்!

கவிதைத் தொகுதியின் மகுடக் கவிதையாக விளங்கும் **இன்னும் உன் குரல் கேட்கிறது** (பக்கம் 60) என்ற கவிதை ஓர் ஆத்மாவின் தேடலை தன்னகத்தே கொண்டிருக்கிறது. கவிதையின் கருத்துக்களில் சொட்டும் ஈரம் மனதிலும் கசிந்துவிடுகிறது. இதோ சில வரிகள்...

'நீ தான் என் எல்லாமே'
என அடிக்கடி நீ சொன்னது
இன்னும் ஞாபகமிருக்கு!

குயிலே!
உனதந்த குரலின்னும்
காதுக்குள் ஈரமாய்
கேட்டுக்கிட்டிருக்கு!

மனசாட்சி இல்லாமல், அல்லது சட்டத்துக்கு புறம்பான செயல்கள் நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன் தினமும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அவ்வாறான சில விடயங்களைத் தொட்டுக்காட்டி கடல் கொண்டு போகட்டும் (பக்கம் 66) எனும் கவிதை எழுதப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது.

பாடசாலை பருவத்து
சிறார்களை வைத்து நிதம்
தொழில் செய்து
பிழைப்பவர்கள் சாகட்டும்..
அவரின் அந்தஸ்து சொத்தெல்லாம்
இப்படித்தான் வந்ததென்றால்
கடல்பொங்கி எல்லாம் கொண்டு போகட்டும்!!!

'பூ மலர்வது, பொழுது புலர்வது... இப்படி எல்லாமே ஒரு கவிஞனுக்கு உவகையளிப்பன தான். அவ்வாறு பிறப்பவைகள் கூட காலப்போக்கில் பனியின் தொடுகையாகவும், தணலின் சுடுகையாகவும் மாறிப் போகின்றன' என்று தனதுரையில் கூறியிருக்கும் நூலாசிரியர் கவிதைகளில் அகம் சார்ந்த கருத்துக்களைத் தவிர பெண்ணியம், ஆன்மீகம், தனிமை, துன்பம், சந்தோஷம், மலையகம் சார் பிரச்சினைகள், சமூக அவலம், சீதனக்கொடுமை, சுனாமி போன்ற உணர்வுகளும் கலந்திருக்கின்றன. காத்திரமான பல கவிதைகளைத் தந்த நூலாசிரியர் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவுக்கு எனது வாழ்த்துக்கள்!!!

## நதிகளின் மரணம்

வேட்டைப்பற்கள் கொண்டு
வெறிபிடித்த வானம்
கீறியது பூமியதை..
பூமி கதறி அழுதது
கண்ணீர் எல்லாம்
நதியில் கலந்தன!

விஷம் கலந்த
மழையினால்
நதி நஞ்சானது
நதிக்கரைகள்
முதலில் மரித்தன!
ஒரு வைகறையில்
நதியின் மரணம்
எழுதப்பட்டது..
இப்படி எல்லா நதிகளும்
மரணித்துப் போயின!

நதிகளின் மரணத்தால்
மனிதன் அவதிப்பட்டான்
இன்னும் அவனது அவதி
தீர்ந்த பாடில்லை!!!

நாச்சியாதீவு பர்வீன்





# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

பூங்காவனம் ஒன்பதாம் இதழ் கிடைக்கப் பெற்றேன். நன்றி. எனது படத்தை அட்டையில் போட்டு நேர்காணலையும் இடம்பெறச் செய்யும் எண்ணம் தாங்களுக்கு ஏற்பட்டதையெண்ணி வியப்படைந்தேன்.

இணையத்தில் பூங்காவனத்தை வாசித்திருந்தாலும் நூலுருவில் பார்த்த பிறகு மிக்க மகிழ்வடைந்தேன். நல்லதொரு இலக்கியச் சேவை. பாராட்டுக்கள். அனைத்து ஆக்கங்களும் சிறப்பாக உள்ளன. கவிதைகள் என்னைக் கவர்ந்தன. சந்திரகாந்தா முருகானந்தனின் கட்டுரை சிந்திக்க வேண்டியதொரு விடயமாகும். சூசை எட்வேட்டின் குருவி(ன்)ப் பாடம் அருமை. தொடர்ந்து பூங்காவனம் வெளிவந்து சிறப்படைய எனது வாழ்த்துக்கள்!!!

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

பூங்காவனம் என்ற காலாண்டு இதழைத் தொடராக வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர் குழுவுக்கு எனது பாராட்டுக்கள். ஏனைய இலக்கிய சஞ்சிகைகளைவிட பூங்காவனம் சஞ்சிகைக்கு ஒரு மேலதிக தகுதியும், தனித்தன்மையும் இருப்பதாக நான் உணர்கிறேன். அதாவது இச்சஞ்சிகை முழுக்க முழுக்க பெண்களால் நிர்வகிக்கப்படும் ஒரு சஞ்சிகையாக இருப்பதே.

முஸ்லீம்கள், மலையகத் தமிழர், வட கிழக்குத் தமிழர் ஆகியோரின் பிரச்சினைகள் இலக்கியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். தமிழ் முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமை தமிழ் இலக்கியத்தினூடாக மென்மேலும் வளர்க்கப்பட வேண்டும். பூங்காவனம் மென்மேலும் சிறப்பாகப் பூத்து மணம் கமழ வேண்டும் என்ற என் நல்லாசிகளை நவில்கிறேன்.

**கா. தவபாலன் பேராதனை**

பூங்காவனம் மலர்களிலே
புதுவடிவம் கொண்டிலங்கும்
பாங்கான ஒன்பதாம் இதழ்
பரவசத்தில் ஆழ்த்தியதே!

நினைத்தும் பார்த்திராத
நேர்த்தியான அமைப்பினில்
அனைத்தும் பொன்மலராய்
அழகொளிர இலங்கிறதே!

பூவையர் இருவரும்
பூத்திடச் செய்துள்ள
பாவையர் மனமது
பாரெங்கும் கமழ்கிறதே!

காலத்தின் தேவைகள்
காத்திரமாய் நிறைவேறும்
கோலமிது காணுவதில்
கோடியின்பம் மலர்ந்ததுவே!

**பி.ரி. அஸீஸ் - கிண்ணியா 07**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நூலகப்பூங்கா




நூலின் பெயர் - ஒப்பாரிக்கோச்சி
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - மு. சிவலிங்கம்
தொலைபேசி - 0512223012
வெளியீடு - நாவல் நகர் தமிழ்ச் சங்கம்
விலை - 350 ரூபாய்



நூலின் பெயர் - தீ குளிக்கும் ஆண் மரம்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஜே. பிரோஸ்கான்
தொலைபேசி - 0779300397
வெளியீடு - பேனா பப்ளிகேஷன்
விலை - 250 ரூபாய்




நூலின் பெயர் - ஒரு குடம் கண்ணீர்
நூலின் வகை - உண்மைக் கதை
நூலாசிரியர் - அஷ்ரஃப் சிஹாப்தீன்
வெளியீடு - யாத்ரா
விலை - 300 ரூபாய்



நூலின் பெயர் - ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - அஷ்ரப் சிஹாப்தீன்
தொலைபேசி - 0777303818
வெளியீடு - யாத்ரா
விலை - 300 ரூபாய்







நூல் - மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - வெ. துஷ்யந்தன்
மின்னஞ்சல் - bvthushy@yahoo.com
வெளியீடு - ஜீவநதி வெளியீடு
விலை - 200 ரூபாய்




நூலின் பெயர் - பலே பலே வைத்தியர்
நூலின் வகை - சிறுவர் கதைகள்
நூலாசிரியர் - கலாபூஷணம் கே. விஜயன்
வெளியீடு - வீ.ஜ. புறமோ பதிப்பகம்
விலை - 200 ரூபாய்



நூலின் பெயர் - ஊற்றை மறந்த நதிகள்
நூலின் வகை - நாவல்
நூலாசிரியர் - சுலைமா சமி இக்பால்
வெளியீடு - எக்மி பதிப்பகம்
விலை - 200 ரூபாய்



நூலின் பெயர் - உலக ஆரம்பமும்
மன்னார் மாவட்டமும்
நூலின் வகை - வரலாற்று நூல்
நூலாசிரியர் - எஸ். ஜெகன்
வெளியீடு - ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலய
பரிபாலன சபை நானாட்டான்
விலை - 150 ரூபாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலின் பெயர் - வாசாப்பு
நூலின் வகை - நாவல்
நூலாசிரியர் - எஸ்.ஏ. உதயன்
வெளியீடு - திருமறைக் கலாமன்றம்
விலை - 250 ரூபாய்




நூலின் பெயர் - கல்லுக்கு உயிர் வந்தால்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியை - கலையழகி வரதராணி
வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம்
விலை - 200 ரூபாய்




நூல் - செம்மாதுளம்பூ (கவிதை)
நூலாசிரியர் - ஷெல்லிதாசன்
முகவரி - 11/6, சென்யூட் லேன், பாலையூற்று, திருகோணமலை
தொலைபேசி - 026 4900648
வெளியீடு - நீங்களும் எழுதலாம் வெளியீடு
விலை - 200/=




நூலின் பெயர் - தாய் மடி தேடி
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியை - கார்த்திகாயினி சுபேஸ்
வெளியீடு - மீரா பதிப்பகம்
விலை - 300 ரூபாய்



பூங்காவனம் துணை ஆசிரியர் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் 'இன்னும் உன் குரல் கேட்கிறது' கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா நிகழ்வின் புகைப்படங்கள் சில..










தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின்
'இன்னும் உன் குரல் கேட்கிறது' கவிதைத் தொகுதி
விற்பனைக்கு உண்டு




விலை - 230/= (தபால் செலவு உட்பட)

M.F. Rimza,
No. 21 E, Sri Dharmapala Raod,
Mount Lavinia.

Mobile - 077 5009 222
Email - poetrimza@gmail.com

வங்கித் தொடர்புகளுக்கு,

Bank of Ceylon, Dehiwala Branch, M.F. Rimza, A/C No - 2017143 என்ற இலக்கத்திற்கு 230/= காசு, காசோலைகளை வைப்பிலிடுவோர் பற்றுச் சீட்டுக்களை எமக்கு அனுப்ப வேண்டும். காசுக் கட்டளைகளாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டுக்களையும் மேலே குறிப்பிட்டுள்ள எமது முகவரிக்கு அனுப்பி இந்தப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments From...**

# Luckyland




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740
Email - luckyland@sltnet.lk

9772012670007

Designed By - H.F. Rizna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org